Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم　　نحمده ونصلّی علیٰ رسوله الکریم　　وعلیٰ عبده المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ


தொகுதி 2

இதழ் 38

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

29 துல்ஹஜ் 1438 ஹிஜ்ரி கமரி　21 தபூக் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

21 செப்டம்பர் 2017


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**பிளேக் நோய் பரவும் காலத்தில் எங்களுக்கு தடுப்பூசி போட வேண்டிய தேவை இருக்காது. இறைவன் சுயமே நம்மையும் நம் வீட்டிலுள்ள அனைவரையும் பாதுகாப்பான். மற்றவர்களுக்கு எதிரில் நம்முடன் அவனது பாதுகாப்பு இருந்து கொண்டிருக்கும் என்று நான் எனது நூலான கிஷ்தி நூஹில் முன்னறிவித்திருந்தேன்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**நாற்பத்தி ஒன்றாவது அடையாளம்:** அதாவது 20 அல்லது 21 வருடங்களுக்கு முன்னதாக நான் ஒரு பிரசுரத்தை வெளியிட்டிருந்தேன். அதில் நீண்ட ஆயுளைப் பெறுகின்ற நான்கு மகன்களைத் தருவோம் என்று இறைவன் என்னிடம் வாக்குறுதி தந்துள்ளான் என்று எழுதியிருந்தேன். இந்த முன்னறிவிப்பின் பக்கமே மவாஹிபுர் ரஹ்மானில் பக்கம் 139 -ல் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ وَهَبَ لِيْ عَلَى الْكِبَرِ اَرْبَعَةً مِّنَ الْبَنِيْنَ وَاَنْجَزَ وَعْدَهٗ مِنَ الْاِحْسَانِ என்ற சொற்றொடரில் அது இடம் பெற்றிருக்கின்றது. அதாவது முதிய வயதில் எனக்கு நான்கு ஆண் குழந்தைகளை வழங்கி (நான் நான்கு ஆண் குழந்தைகளை வழங்குவேன் என்ற) தனது வாக்குறுதியை நிறைவேற்றிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரியது. மஹ்மூது அஹ்மது, பஷீர் அஹ்மது, ஷரீஃப் அஹ்மது, முபாரக் அஹ்மது ஆகியோர் அந்த நான்கு ஆண் குழந்தைகள் ஆவர். அவர்கள் உயிருடன் இருக்கின்றனர்.

**நாற்பத்தி இரண்டாவது அடையாளம்:** இறைவன் பேரன் என்ற முறையில் ஐந்தாவது குழந்தையைப் பற்றிய வாக்குறுதியை தந்திருந்தான். இது பற்றி وَبَشَّرَنِيْ بِخَامِسٍ فِيْ حِيْنٍ مِّنَ الْاَحْيَانِ அதாவது இந்த நான்கு குழந்தைகளைத் தவிர ஐந்தாவது ஆண் குழந்தை பேரனாக பிறக்க இருக்கின்றான் என்ற இந்த முன்னறிவிபை மவாஹிபுர் ரஹ்மான் என்ற இதே நூலின் 139 -வது பக்கத்தில் நான் எழுதியிருந்தேன். அந்த பேரன் தொடர்பாக அவன் ஏதாவது ஒரு சமயத்தில் கண்டிப்பாகப் பிறப்பான் என்று இறைவன் எனக்கு நற்செய்தி வழங்கியுள்ளான். இது தொடர்பாக இன்னொரு இல்ஹாமும் எனக்கு வந்துள்ளது. அது பல நாட்களுக்கு முன்னரே அல் பத்ர் மற்றும் அல் ஹகம் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருந்தது.

அந்த இல்ஹாம் இதுவாகும்: اِنَّا نُبَشِّرُكَ بِغُلَامٍ نَافِلَةً لَّكَ نَافِلَةً مِّنْ عِنْدِيْ அதாவது நாம் உமக்கு இன்னொரு ஆண் குழந்தை தொடர்பான நற்செய்தியை வழங்குகின்றோம். அவர் பேரராக இருப்பார். அதாவது, மகனின் மகனாக இருப்பார். இந்தப் பேரர் நம் தரப்பிலிருந்து வந்துள்ளார். இதற்கேற்ப ஏறக்குறைய மூன்று மாத காலக்கட்டம் கழிந்திருக்கும். (மூன்று மாதத்திற்கு முன்பு) எனது மகனான மஹ்மூது அஹ்மதின் வீட்டில் மகன் பிறந்தான். அவனுக்கு நஸீர் அஹ்மது என்று பெயர் வைக்கப்பட்டது. அவ்வாறு இந்த முன்னறிவிப்பு நான்கரை வருடங்களுக்குப் பிறகு நிறைவேறி விட்டது.

**நாற்பத்தி மூன்றாவது அடையாளம்:** பிளேக் நோய் பரவும் காலத்தில் எங்களுக்கு தடுப்பூசி போட வேண்டிய தேவை இருக்காது. இறைவன் சுயமே நம்மையும் நம் வீட்டிலுள்ள அனைவரையும் பாதுகாப்பான். மற்றவர்களுக்கு எதிரில் நம்முடன் அவனது பாதுகாப்பு இருந்து கொண்டிருக்கும். ஆனால், தடுப்பூசி போடுகின்ற சிலருக்கு உயிர் இழப்பு ஏற்படும் என்று நான் எனது நூலான கிஷ்தி நூஹில் முன்னறிவிப்பு செய்திருந்தேன். பிறகு அவ்வாறே நிகழ்ந்தது. சில மக்களுக்கு தடுப்பூசி போட்டுக் கொண்டதனால் எந்த அளவு இழப்பு ஏற்பட்டது என்றால் அவர்கள் தமது பார்வையை இழந்து விட்டனர். சிலரது மற்ற உறுப்புகளில் குறைபாடு உருவாகி விட்டது. எல்லாவற்றையும் விட அதிகமாக குஜராத் மாவட்டத்திலுள்ள மக்குவான் என்ற ஊரில் தடுப்பூசி போட்டதனால் ஒரே சந்தர்ப்பத்தில் 19 பேர் இறந்து விட்டனர்.

**நாற்பத்தி நான்காவது அடையாளம்:** மாலியர் கோட்லாவின் தலைவரான சர்தார் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் அவர்களின் மகனான அப்துர் ரஹீம் கான் ஒரு கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்பட்டு நோய்வாய்ப்பட்டிருந்தார். அவர் உயிர் பிழைப்பதற்கான எந்தவொரு சூழ்நிலையையும் தென்படாமல் இருந்தது. ஒரு வகையில் மரணித்தவராகவே அவர் கருதப்பட்டார். இந்த சமயத்தில் நான் அவருக்காக துஆ செய்தேன். அப்போது அவருக்கு மாறாத இறை நியதி விதிக்கப்பட்டிருப்பது போன்று தோன்றியது. அப்போது நான் இறைவனின் முன்னிலையில் இறைவா! நான் அவருக்காக சிபாரிசு செய்கின்றேன் என்று கூறினேன். அதற்கு இறைவன் مَنْ ذَا الَّذِيْ يَشْفَعُ عِنْدَهٗ اِلَّا بِاِذْنِهٖ இறைவனின் அனுமதி இல்லாமல் ஒருவருக்கு சிபாரிசு செய்வதற்கான உரிமை யாருக்கு இருக்கின்றது? என்று பதில் கூறினான். அப்போது நான் அமைதியாக இருந்து விட்டேன். அதற்கு பிறகு சற்றும் தாமதிக்காமல் اِنَّكَ اَنْتَ الْمُجَازُ அதாவது உமக்கு சிபாரிசு செய்வதற்கான அனுமதி தரப்படுகின்றது என்ற இந்த இல்ஹாம் வந்தது. அப்போது நான் மிகவும் மன்றாடியவாறு உருக்கத்துடன் துஆ செய்ய ஆரம்பித்தேன். அப்போது இறைவன் எனது துஆவை ஏற்றுக் கொண்டான். கல்லறையிலிருந்து எழுந்து வெளியில் வந்தது போன்று பையன் எழுந்து வந்தார். உடல் நலத்தின் அடையாளங்கள் அவரிடம் வெளிப்பட்டன. எந்த அளவு அவர் மெலிந்து போனார் என்றால் வெகு காலம் கழிந்த பிறகு அவரது அசல் உடல் திரும்பக் கிடைத்தது. அவர் உடல் நலம் பெற்றார். உயிருடன் இருக்கின்றார்.

**நாற்பத்தி ஐந்தாவது அடையாளம்:** கலப்பற்ற தூய உள்ளம் கொண்ட எனது நண்பரான மவ்லவி நூருத்தீன் சாஹிப் அவர்களின் ஒரு மகன் இறந்து விட்டார். அவர்களுக்கு அந்த ஒரு மகன்தான் இருந்தார். அவர் மரணமடைந்து விட்டதால் மவ்லவி சாஹிப் அவர்கள் சந்ததியற்றவராக ஆகி விட்டார்கள் என்ற எண்ணத்தில் எதிரிகள் மிகவும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அப்போது நான் அவர்களுக்காக அதிகமாக துஆ செய்தேன். துஆ செய்த பிறகு இறைவன் புறமிருந்து உனது துஆவினால் ஒரு ஆண் குழந்தை பிறக்கும் என்று எனக்கு தகவல் கிடைத்தது. அவர் முழுக்க முழுக்க துஆவின் மூலமாக மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளார் என்பதற்குரிய அடையாளமாக அவரது

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

சிலர் கூறுகின்றார்கள்: நாங்கள் பணிவை மேற்கொள்கிறோம். சமாதானத்திற்காக எல்லா நிபந்தனைகளையும் ஒப்புக் கொள்கிறோம். இருந்தும் கூட மறு தரப்பில் உள்ளவர்கள் அநீதியுடன் நடக்கின்றனர். உண்மையிலேயே மறு தரப்பு அப்படித்தான் அவர்கள் கூறுவது போன்று இருக்கிறது என்றால் பிறகு அவர் தமது விவகாரத்தை இறைவனிடம் விட்டு விடட்டும். அவர் துண்டிக்கப்பட்டு விடுவார். பிறகு மேலே இதனையும் கூறுகிறார்கள். பிடிவாதம் பிடித்து மன்னிக்காமல் இருப்பவர் பேறிழந்தவர் ஆவார் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். ஆகவே, எவர்கள் பிடிவாதம் பிடிக்கிறார்களோ அவர்களுக்கு இது மிகப்பெரும் எச்சரிக்கை ஆகும்.

பைஅத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்றாமல் அல்லாஹ் திருப்தி அடையமாட்டான். அல்லாஹ்வை திருப்திப்படுத்துவதற்காக அல்லாஹ்வின் அடியார்களின் உரிமையை வழங்குவதும் சமாதானமும் தூய்மையும் அவசியமாகும்.

படைப்பினங்களிடம் அனுதாபத்துடன் நடந்து கொள்வது மற்றும் சமாதானத்தை ஏற்படுத்துவது எத்தகைய நல்லொழுக்கம் என்றால் அதை கடைபிடிக்குமாற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு மீண்டும் மீண்டும் போதனை செய்துள்ளார்கள். எனவே, ஒவ்வோர் அஹ்மதியும் இதன் பக்கம் அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கட்டளைகளை மேற்கோளாகக் காட்டி மனித இனத்துடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வது, சமாதானத்தை விரும்புவது, உயர்வான நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவது இறைவனின் விருப்பத்திற்கு முன்னுரிமை வழங்குவது போன்ற விஷயங்கள் தொடர்பாக ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் மிக முக்கிய அறிவுரைகளை வழங்கினார்கள்.

அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பு தருவானாக. நாம் அன்னாரது போதனையின்படி செயல்பட்டவாறு மனித குலத்தின் மீது அனுதாபம் காட்டுபவராகவும், சமாதானத்திற்கான அடித்தளத்தை ஏற்படுத்துபவராகவும், தவ்ஹீதின் சரியான புரிதிறன் பெறுபவராகவும், சமுதாயத்தில் அன்பு மற்றும் நேசத்தைப் பரிமாறுபவராகவும் இருப்போமாக. உலகின் விருப்பம் நம் மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருக்கட்டுமாக. அல்லாஹ்வின் விருப்பத்தை நாம் எப்போதும் தேடுபவராகவும் அதுவே நமது முன்னுரிமையாகவும் இருக்கட்டுமாக.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 18 ஆகஸ்டு 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **ஸுஹுர்** மாதம் **18 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ . الرَّحْمٰنِ الرَّحِيمِ . مٰلِكِ يَوْمِ الدِّينِ . إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِينُ . اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ . صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ .

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் கூறுகிறார்கள்: “இறைவன் உங்களிடம் முழுமையான புரட்சி உருவாக வேண்டும் என்று விரும்புகிறான். மேலும் உங்களிடம் ஒரு மரணத்தைக் கேட்கிறான். அதற்குப் பிறகு அவன் உங்களை உயிர்ப்பிப்பான்.”

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: “நீங்கள் ஒருவருக்கொருவர் விரைவில் சமாதானம் செய்து கொள்ளுங்கள். உங்கள் சகோதரர்களின் பாவங்களை மன்னியுங்கள். ஏனென்றால் தமது சகோதரருடன் சமாதானத்தை மேற்கொள்வதை விரும்பாத மனிதர் விஷமியாவார். அவர் துண்டிக்கப்படுவார். ஏனெனில், அவர் பிரிவினையை ஏற்படுத்துகிறார்.”

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: “நீங்கள் உங்கள் மன உணர்வுகளை எல்லாக் கோணத்திலும் விட்டு விடுங்கள். ஒருவருக்கொருவர் கோபத்தை விட்டு விடுங்கள். நீங்கள் மன்னிக்கப்படுவதற்காக உண்மையாளர் –களாக இருந்தும் பொய்யர்களைப் போன்று பணிவை மேற்கொள்ளுங்கள்.”

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: “மன உணர்வின் இறுக்கத்தை விட்டு விடுங்கள். நீங்கள் எந்த வாசலில் அழைக்கப்படுகிறீர்களோ அதில் ஒரு மன இறுக்கமும் பிடிவாதமும் கொண்ட மனிதன் நுழைய முடியாது. உங்களில் அதிக கண்ணியத்–திற்குரியவர் தமது சகோதரரின் பாவத்தை அதிகமாக மன்னிப்பவரேயாவார்.” (கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 12-13)

இந்த மேற்கோளை பல்வேறு சொற்பொழிவு –களிலும் தர்ஸ்களிலும் பெரும்பாலும் ஜமாஅத் மக்களிடம் எடுத்து வைக்கப்படுகிறது. உண்மை–யாளராக இருந்து பொய்யரைப் போன்று பணிவை மேற்கொள்ளுங்கள் என்ற சொற்றொடரை பெரும்பாலான அஹ்மதிகள் பல்வேறு நேரங்களில் எடுத்து வைக்கின்றனர்.

இன்னும் சொல்வதாயின், பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கிடையில் உள்ள விவகாரங்களை எடுத்து வைக்கும்போது, நாங்கள் மேற்கண்டவாறு நடந்து கொண்டோம். ஆனால் மறு தரப்பு அந்நிலையிலும் கூட அநீதியான நடைமுறையைக் கடைபிடித்தது என்று கூறுகின்றனர்.

கடந்த குத்பாவில் நான் கஸா மற்றும் சண்டை சச்சரவுகள் தொடர்பான வழக்குகள் சம்பந்தமாக சில விஷயங்களைக் கூறினேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இந்த சொற்களை அன்னார் தமது போதனையில் இணைத்துள்ளார் –கள். இது அன்னார் தம்மை ஏற்றுக் கொண்டவர் –களிடம் கொண்ட எதிர்பார்ப்பும் அன்னாரது உள்ளத்து வேதனையின் வெளிப்பாடும் ஆகும். மனிதன், ‘நூஹ் நபியின் கப்பல்’ என்ற நூலிலுள்ள இனிய போதனைகளை முழுமையாகப் படித்தான் எனில் நடுநடுங்கிப் போய் விடுகிறான். நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த சில வார்த்தைகள் மீண்டும் மீண்டும் நமக்கு முன் எடுத்து வைக்கப் –படுகிறது. எனினும், நம்மில் பலர் எவ்வாறு இருக்கின்றனர் எனில் மன்னிப்பதற்கும் சமாதானத்திற்காக நீட்டப்பட்ட கையை ஏற்றுக் கொள்ளவும் தயாராக இருப்பதில்லை.

நான் ஏற்கனவே கூறியது போன்று சிலர் கூறுகின்றார்கள்: நாங்கள் பணிவை மேற்கொள்கிறோம். சமாதானத்திற்காக எல்லா நிபந்தனைகளையும் ஒப்புக் கொள்கிறோம். இருந்தும் கூட மறு தரப்பில் உள்ளவர்கள் அநீதியுடன் நடக்கின்றனர்.

உண்மையிலேயே மறு தரப்பு அப்படித்தான் அவர்கள் கூறுவது போன்று இருக்கிறது என்றால் பிறகு அவர் தமது விவகாரத்தை இறைவனிடம் விட்டு விடட்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: அவர் துண்டிக்கப்பட்டு விடுவார். பிறகு மேலே இதனையும் கூறுகிறார்கள். பிடிவாதம் பிடித்து மன்னிக்காமல் இருப்பவர் பேறிழந்தவர் ஆவார். (கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 13)

ஆகவே, எவர்கள் பிடிவாதம் பிடிக்கிறார்களோ அவர்களுக்கு இது மிகப்பெரும் எச்சரிக்கை ஆகும். அவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஒருபுறம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தில் வந்து நாங்கள் குழப்பம் விளைவிக்க மாட்டோம்; மன எழுச்சிகளிலிருந்து விலகி இருப்போம் என்று அவர்கள் உறுதி எடுக்கின்றனர். மறுபுறம் சமாதானத்தில் இருந்து விலகுகின்றனர். பிறகு இது பைஅத் உடன்படிக்கையிலிருந்து விலகுவதும் அதை கடைபிடிக்காமையும் ஆகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்: ''நமது ஜமாஅத் வெறும் வார்த்தையுடன் நின்று விடக் கூடாது.'' வார்த்தை –களை மட்டும் கொண்டு உங்களை அஹ்மதி என்று நிரூபித்துக் கொண்டிருக்க வேண்டாம். மாறாக பைஅத்தின் உண்மையான விருப்பத்தை நிறைவேற்றுபவராக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: உட்புற மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். வெறுமனே சட்ட விளக்கங்களால் இறைவனை மகிழ்ச்சி அடையச் செய்ய முடியாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: உட்புற மாற்றம் இல்லையெனில் உங்களுக்கும் மற்றவருக்கும் இடையில் எந்த வித்தியாசமும் இல்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 188; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஆகவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் தெளிவாகக் கூறி விட்டார்கள். பைஅத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்றாமல் அல்லாஹ் திருப்தி அடையமாட்டான். அல்லாஹ்வை திருப்திப் படுத்துவதற்காக அல்லாஹ்வின் அடியார்களின் உரிமையை வழங்குவதும் சமாதானமும் தூய்மையும் அவசியமாகும். அன்னார் தமது நிலையை கோடிட்டவாறு இதனை வெளிப்படுத்தி –யுள்ளார்கள். தம்மிடம் எந்த அளவுக்கு பரந்த தைரியமும், மன்னிக்கும் தன்மையும் இருக்கிறது என்பதை கூறினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஆணையிட்டுக் கூறுகிறேன். ஒருவர் என்னை ஆயிரம் முறை தஜ்ஜால் என்றும், பெரும் பொய்யன் என்றும் கூறியிருந்தாலும் என்னை எதிர்ப்பதற்காக எல்லா வகையிலும் முயற்சி செய்திருந்தாலும், அவர் சமாதானத்திற்காக வந்தார் எனில் அவர் என்ன கூறியிருந்தார்? என்னோடு அவர் எப்படி நடந்து கொண்டால் என்றெல்லாம் என் உள்ளத்தில் எண்ணம் வராது; வர முடியாது.

பிறகு அன்னார் நமக்கு போதனை செய்தவாறு கூறினார்கள்: எமது போதனை இதுவாகும். இரு விஷயங்களை நினைவில் கொள்ளுங்கள். ஒன்று இறைவனுக்கு பயப்படுங்கள். அடுத்து நீங்கள் உங்கள் மீது அனுதாபம் காட்டுவது போன்று உங்கள் சகோதரரிடம் அனுதாபம் காட்டுங்கள். உங்களுக்காக எதனை விரும்புகிறீர்களோ, மற்றவர் உங்களிடம் எவ்வாறு அனுதாபத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று விரும்புவீர்களோ அதே நடைமுறையை உங்கள் சகோதரருக்காக –வும் காட்டுங்கள்.

அவர்கள் கூறினார்கள்: ''எவரிடமாவது ஏதாவது குறை மற்றும் தவறு வெளிப்பட்டால் அதனை மன்னிக்க வேண்டும். அதனை பெரிதுபடுத்தக் கூடாது. காழ்ப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளக் கூடாது.'' (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 74; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) ஆகவே, நாம் எப்போதும் இதனை நினைவில் கொள்ள வேண்டும். இக்கால உலகில் எல்லா பக்கமும் குழப்ப நிலையே தொடர்கிறது. நாம் நம்மை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தின் கீழ் வந்ததன் மூலம் ஒரு கோட்டைக்குள் வந்து விட்டதாகக் கருதுகிறோம். அல்லாஹ் உலகில் பொதுவாக காணப்படுகிற குழப்பங்களிலிருந்து நம்மைப் பாதுகாத்து வைத்திருப்பதற்காக நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறோம். உண்மையில் நாம் எப்போது பாதுகாப்பாக இருக்க முடியும் எனில், எப்போதும் நாம் இந்த உணர்வுடன் இருக்க வேண்டும். நாம் நமது அனுமதிக்கப்பட்ட விவகாரங்களிலும், மற்றவரின் விவகாரங்களில் உட்படும்போதும் மென்மையைக் கடைபிடிக்க வேண்டும். சமாதானத்திற்கான அடிப்படையை ஏற்படுத்த வேண்டும். அது அல்லாமல் நமது பேச்சுக்கள், பேச்சுக்கள் என்ற அளவில் நின்று விடும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்தில் சேர்ந்து பயனடைந்துள்ளோம் என்ற நமது வாதம், வாதம் என்ற அளவில் நின்று விடும். அது நமது வாதமாக இருக்கலாமே ஒழிய அதில் உண்மை இல்லை. உயர் நல்லொழுக்கத்தின் ஒவ்வொரு ஒழுக்கமும் நம்மிடம் தமது பொலிவைக் காட்டும்போதுதான் நாம் பயனடைந்தவராக இருப்போம். படைப்பினங் –களுடன் அனுதாபத்துடனும் சமாதானத்துடனும் நடந்து கொள்வது எத்தகைய நல்லொழுக்கம் எனில் அதனை மேற்கொள்வதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் போதித்துள்ளார்கள்.

ஆகவே, ஒவ்வொர் அஹ்மதியும் இதன் பக்கம் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். அன்னாரின் இன்னும் சில மேற்கோள்கள் உள்ளன. அவற்றை மீண்டும் மீண்டும் தமது பல்வேறு நூல்களிலும், தமது மல்ஃபூஸாத்திலும் அவர்கள் குறிப்பிடு– கிறார்கள். ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''பலசாலி என்பவர் மற்றவரை வீழ்த்துபவர் அல்ல. அசல் பலசாலி கோபத்தின்போது தம்மை கட்டுப்படுத்திக் கொள்பவரேயாவார்.'' (சஹீஹ் புகாரி கிதாபுல் அதப் பாபுல் ஹுஃஸ்ரி மினல் கஸபி ஹதீஸ் 6114)

ஆகவே, இது ஒரு நம்பிக்கையாளரின் அடையாளமாகும். அதுபோன்ற உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும். கோபத்தின் நிலையில் தம்மை கட்டுப்படுத்த வேண்டும். சமாதானம் செய்து கொள்ள முன் வர வேண்டும். ஒரு காஃபிர் ஒருபோதும் இதுபற்றி சிந்திக்க முடியாது. மாறாக அவருக்கு இது மிகவும் வியப்பிற்குரிய விஷயமாகும். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடைய ஒரு சம்பவம் இவ்வாறு வருகிறது: அன்னார் ஓர் எதிரியை வீழ்த்தியவாறு அவர் மீது அமர்ந்து விட்டார்கள். அவரைக் கொல்லப் போகும்போது அந்த எதிரி அவர்கள் மீது துப்பி விட்டான். உடனே அன்னார் அவனை விட்டு அகன்று விட்டார்கள். இந்நிலையில் ஏன் என்னை நீங்கள் விட்டு விட்டீர்கள் என்று அவன் கேட்டான். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், ''நாம் முதலில் உம்மை இஸ்லாத்தின் எதிரி என்பதற்காகவும் இஸ்லாத்திற்கு எதிராக நீர் சண்டைக்கு வந்ததன் காரணத்தாலும் கொலை செய்யவிருந்தேன். இப்போது நீர் எம் மீது துப்பி விட்டீர். எனவே, எனது சுயம் இதில் கலந்து விட்டது. நான் எனக்காக எவரையும் கொலை செய்ய விரும்பவில்லை'' என்று கூறினார்கள். இதுவே வரலாற்றில் நமக்குத் தென்படுகின்ற நமது பெரியவர்கள் வெளிப்படுத்திக் காட்டிய உயர் நல்லொழுக்கம் ஆகும். (முஹம்மது அலி இப்னு அலி அவர்கள் எழுதியுள்ள அல்ஹிஸ்பு உஸுலே ரியாஸத் மற்றும் தாரீகுல் முலூக் என்ற நூல்களிலிருந்து மவ்லானா முஹம்மது ஜாஃபர் ஷா அவர்களின் மொழியாக்கம் பக்கம் 66. லாஹூரிலுள்ள தாருஸ் ஸகாஃபத் இஸ்லாமிய்யாவில் 2007 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

ஆகவே, கோபத்தை அடக்குவது ஒரு நம்பிக்கையாளரின் அடையாளமாகும். சமாதானத்தின் பக்கம் வருவதற்கு அவர் முற்பட வேண்டும். ஆனால் இதனை ஒரு காஃபிர் சிந்திக்கவே முடியாது. இதுவே முஃமினின் அடையாளமாகும். இதனையே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் உருவாக்க விரும்பினார்கள். அதன் மூலம் நமது ஒவ்வொரு செயல் மூலமும் இஸ்லாத்தின் உண்மையான போதனை வெளிப்பட வேண்டும். மன்னிப்பு மற்றும் கண்டும் காணாமை, சமாதானம் ஆகிய போதனைகள் வெளிப்பட வேண்டும்.

இந்த வகையில் ஒரு சபையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: (அது இந்த ஹதீஸின் விளக்கவுரையாகவும் உள்ளது.) நமது ஜமாஅத்தில் குத்துச் சண்டையிடுபவர்கள் மற்றும் பலசாலிகளை உருவாக்குவது நமது நோக்கமன்று. பெரும் பலசாலிகள் நமக்கு வேண்டாம். அவர்கள் கூறினார்கள்: நமது ஜமாஅத்திற்கு எத்தகைய சக்தி படைந்தவர்கள் தேவை எனில் அவர்கள் நல்லொழுக்கத்தில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்பவராக இருக்க வேண்டும். தமது நல்லொழுக்கத்தில் மாற்றம் கொண்டு வந்து உயர் நல்லொழுக்கத்திற்கு அதனை எடுத்துச் செல்பவராக இருக்க வேண்டும். யதார்த்தமான விஷயம் என்னவெனில், பலசாலி என்பவர் மலையை அதன் இடத்தில் இருந்து அகற்றுபவர் இல்லை. இல்லவே இல்லை. உண்மையான வீரர் என்பவர் நல்லொழுக்க மாற்றத்தை தம்மிடம் கொண்டு வர சக்தி படைத்தவரேயாவார். அவர் தம்மை கட்டுப்படுத்தக் கூடியவராகவும் நல்லொழுக்கத்தைக் கடைபிடிப்பவராகவும் இருக்க வேண்டும்.

அவர்கள் கூறினார்கள்: ஆகவே நினைவில் கொள்ளுங்கள். உங்கள் எல்லா தைரியத்தையும் வீரத்தையும் நல்லொழுக்கத்தை மேம்படுத்து –வதற்காகச் செலவழியுங்கள். ஏனெனில் அதுவே உண்மையான சக்தியும் துணிவும் ஆகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 140; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) ஆகவே, இது நமது நோக்கமாக இருக்க வேண்டும்.

பிறகு ஓரிடத்தில் ஒரு சபையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ஒவ்வொருவரும் தமது தீய வழக்கங்களை விட்டு விட்டு நல்லொழுக்கங்கள் மேற்கொள்கிறார் என்றால், அவரைப் பொருத்தவரை அதுவே ஒரு கராமத் (அற்புதம்) என்று நான் கருதுகிறேன். மாற்றத்தை ஏற்படுத்துவதும் நல்லொழுக்கங்–களைப் பெறுவதும் ஒவ்வொருவருக்கும் அற்புதம் ஆகும். பைஅத்தில் வந்து என்ன அற்புதம் உங்களிடம் ஏற்பட்டது என்று மக்கள் கூறுகின்றனர். அவர்கள் நல்லொழுக்கத்தை மேற்கொண்டு தீய வழக்கங்களை விட்டு விட்டனர். அதுவே ஒரு அற்புதம் ஆகும்.

அவர்கள் கூறுகிறார்கள்: உதாரணமாக, மிகவும் கடுமையான இயல்பும் கோபமும் கொண்டவர் இந்த தீய ஒழுக்கத்தை விட்டு விட்டார். சகிப்புத் தன்மையையும் மன்னிப்பையும் கடைபிடிக்கிறார். அல்லது கருமித்தனத்தை விட்டு விட்டு வள்ளல் தன்மையை மேற்கொள்கிறார். பொறாமைக்கு பதில் அனுதாபத்தை மேற்கொள்கிறார் எனில் சந்தேமின்றி அது அற்புதம் ஆகும். நல்லொழுக்–கத்தைக் கடைபிடித்து தீயொழுக்கத்தை விட்டு விட்டார். கோபத்தைக் கை விட்டார். மன்னிப்பு மற்றும் சகிப்புத்தன்மையின் வழக்கத்தை உருவாக்கினார். கருமித்தனத்தை விட்டார். வள்ளல் தன்மையைப் பெற்றார். பொறாமையை விடுத்து மற்றவர் மீது அனுதாப உணர்வை வைத்தார். இவற்றை அவர் செய்கிறார் எனில் அதுவே அற்புதம் ஆகும். உங்களிடம் ஒரு புரட்சி உருவாகி உள்ளது.

அவர்கள் கூறுகிறார்கள்: அதேபோன்று தன்னலம், சுயநலம் ஆகியவற்றை விட்டு விட்டு பணிவையும் அடக்கத்தையும் மேற்கொள்கிறார் எனில் அந்த அடக்கமே ஓர் அற்புதம் ஆகும். ஆகவே, உங்களில் எவர்தான் அற்புதம் காட்டுபவராக இருக்க விரும்ப மாட்டார்? ஒவ்வொருவரும் அவ்வாறு இருக்க விரும்புகிறார் என்பதை நான் அறிவேன். ஆகவே இது ஒரு நிலையான மற்றும் உயிருள்ள அற்புதம் ஆகும். இந்த புரட்சியையே உங்களுக்குள் உருவாக்க வேண்டும். தீய ஒழுக்கங்களை விட்டு விட்டு நல்லொழுக்கங்களை மேற்கொள்ளுங்கள்.

அவர்கள் கூறினார்கள்: மனிதன் நல்லொழுக்க நிலையை சரி செய்யட்டும். ஏனெனில் இது எத்தகைய அற்புதம் என்றால் அதன் தாக்கம் ஒருபோதும் வீணாகாது. மாறாக அதன் பலன் நீண்ட தூரம் வரை சென்றடைகிறது. நம்பிக்கை கொண்டவர் படைக்கப்பட்டவர் மற்றும் படைப்பவர் ஆகிய இருவரின் பார்வையிலும் அற்புதம் நிகழ்த்துபவராக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் பார்வையிலும் அற்புதம் உடையவராக இருக்க வேண்டும். படைப்பினங்களின் பார்வையிலும் அற்புதம் உடையவராக வேண்டும். படைப்பினங்களின் உரிமையையும் வழங்குபவராக இருக்க வேண்டும்.

அவர்கள் கூறுகிறார்கள்: பெரும்பாலான உலக இன்பங்களில் மூழ்கி விட்டவர்கள் எத்தகையவர்கள் எனில் அவர்கள் நிறைய அசாதாரணங்களைக் கூட நம்பமாட்டார்கள். ஆனால் நல்லொழுக்கத்தை கண்டு தமது தலையைக் குனிந்து விட்டார்கள். பெரும் பெரும் குற்றவாளிகள், பெரும் தீயவர்கள், பெரும் பெரும் உல்லாசப் பிரியர்கள் அடையாளங்–களைப் பார்த்து கூட தமது நிலைமைகளை மாற்றவில்லை. ஆனால் நல்லொழுக்க நிலையைக் கண்டு தலைகுனிந்தார்கள்; ஏற்றுக் கொண்டார்கள்; ஏற்றுக் கொள்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இருக்கவில்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: பெரும்பாலான மக்களின் வரலாறுகளைப் பார்த்தால் அவர்கள் இந்த நல்லொழுக்க அற்புதத்தைக் கண்டே சத்திய மார்க்கத்தை ஒப்புக் கொண்டனர். (மல்∴பூஸாத் தொகுதி 1 பக்கம் 141-142; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அன்னார் இதனைக் கூறிக் கொண்டிருந்த சந்தர்ப்பம் எப்படியிருந்தது எனில், அதன் செயல் முன்மாதிரியும் கூட அவர்களிடமிருந்தே வெளிப்பட்டது. முதலிலும் நான் பலமுறை அந்த சம்பவத்தைக் கூறியுள்ளேன். அப்போது இரண்டு சீக்கியர்கள் வந்தனர். சபையில் அமர்ந்து வீணான விஷயங்களைப் பேச ஆரம்பித்தனர். ஏசிப் பேசினர்; அபத்தமாகப் பேசினர். மஸ்ஜிதில் அமர்ந்து, அன்னாரின் சபையில் அமர்ந்து கொண்டே இவ்வாறு பேசிக் கொண்டிருந்தனர். அன்னார் எதுவும் கூறவில்லை. அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நல்லொழுக்கத்தின் எத்தகைய உன்னதமான செயல் முன்மாதிரியைக் காட்டுகிறார்கள் என்பதே எல்லாருடைய எண்ணமுமாக இருந்தது. ஏனெனில் அவர்களின் இடத்தில் அவர்களின் சபையில் அஹ்மதிகள் இருந்தனர். எனினும் எதுவும் கூற எவருக்கும் அன்னார் அனுமதி அளிக்கவில்லை. அவர்களது வாயில் வந்ததையெல்லாம் சொல்லி விட்டு அவர்கள் போய் விட்டனர். பிறகு போலீஸ் வந்து அவர்களைப் பிடித்தனர். (மல்∴பூஸாத் தொகுதி 1 பக்கம் 142; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது). இதுவே அன்னாரின் உயர் நல்லொழுக்கமாகும். தம்மை ஏற்றுக் கொண்டவர்–களின் முன் அன்னார் அந்த ஒழுக்கத்தை எடுத்து வைத்தார்கள்.

மனிதனின் உள்ளிலிருந்து மன உணர்வுகள் என்ற புழு வெளியேறா விட்டால் அவருக்கு தவ்ஹீதின் மீதும் ஈமான் இருக்காது என்பதனை வெளிப்படுத்தியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: அசல் விஷயம் என்னவெனில், அல்லாஹ்வின் அருள் இல்லாமல் இந்த மன உணர்வுகள் என்ற புழு உங்களிடம் இருந்து வெளியேற முடியாது. ஆகவே அல்லாஹ்வின் அருளைப் பெற முயற்சி செய்ய வேண்டும்.

அவர்கள் கூறினார்கள்: இது மிகவும் நுட்பமான புழுவாகும். எல்லாவற்றிலும் அதிகமான கேடு இதனால் விளைகிறது. மன எழுச்சிகளால் தாக்கப்பட்டு அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் மற்றும் அவன் விதித்துள்ள வரம்புகளை விட்டும் வெளியே சென்று விடுகிறார்கள். அதேபோன்று அடியார்களின் உரிமையையும் பறிக்கிறார்கள். இவர்களெல்லாம் படித்தவர்கள் இல்லை என்பதால் அவ்வாறு இருக்கிறார்கள் என்பதல்ல. மாறாக அத்தகையோரை மிகப் பெரும் மவ்லவி, ஆலிம் பாஸில் ஆகக் காண்பீர்கள். நிறைய பேர் மார்க்க அறிஞர் என்றும் சூஃபி என்றும் அழைக்கப்படுபவர்களாக இருப்பர். இவையெல்லாம் இருந்தும் இவர்கள் இந்த நோய்களால் பீடிக்கப்பட்டிருப்பர். அல்லாஹ்வுடைய உரிமையையும் அடியாரின் உரிமையையும் தராமல் இருப்பது வெறும் அறிவற்றவர்களின் வேலையல்ல. அல்லது இவர்கள் வாய்ப்பு கிடைத்தால் மக்களின் உரிமையைப் பறிக்க முயற்சி செய்பவர்களாக இருக்கிறார்கள். இவர்களுள் பெரும்பாலோர் நல்ல படித்தவர்கள், இன்னும் சொல்வதாயின் அறிஞர்கள். அதைவிட மேலாக மார்க்க அறிவுமிக்கவர் என்றும் சூஃபி என்றும் மக்களால் கூறப்படுபவர்கள். அவர்களும் இந்த நோயினால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். தமக்கென வரும்போது அவர்கள் எல்லாவற்றையும் மறந்து விடுகிறார்கள். அவர்களுக்கு இறைவனும் நினைவிற்கு வருவதில்லை. அடியாரின் உரிமையோ, நல்லொழுக்கமோ நினைவுக்கு வருவதில்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: இந்த சிலைகளில் இருந்து விலகுவதுதான் வீரம் ஆகும். அவற்றை இனங்கண்டு கொள்வதுதான் முழுமையான அறிவுடைமையாகும். இந்த சிலைகளால்தான் பரஸ்பரம் நயவஞ்சகம் உருவாகிறது. இதனால் ஆயிரக்கணக்கானோர் இரத்தம் சிந்துகிறார்கள். ஒரு சகோதரர் மற்றவரின் உரிமையைப் பறிக்கிறார். இவ்வாறு ஆயிரக்கணக்கான தீமைகள் இதனால் உருவாகின்றன.

அவர்கள் கூறுகிறார்கள்: ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வினாடியும் காரணிகளின் மீது எந்த அளவுக்கு நம்பிக்கை வைக்கப்படுகிறது எனில், இறைவனை ஒரு செயலிழந்த உறுப்பாக ஆக்கி விட்டனர். மிகவும் குறைந்த மக்களே தவ்ஹீதின் அசல் கருத்தைப் புரிந்துள்ளனர். அவர்களிடம் கூறப்பட்டால் நாங்கள் முஸ்லிம்கள் இல்லையா? கலிமா சொல்வதில்லையா? என்று உடனே கேட்பார்கள். ஆனால் பரிதாபம் என்னவெனில், வாயால் கலிமா சொல்லி விட்டதே போதுமானது என்று கருதி விட்டார்கள். தவ்ஹீதின் அசல் கருத்தை விளங்கவில்லை. லாயிலாஹ இல்லல்லாஹ் சொல்லி விட்டோம். அதுவே போதுமானது என்று கருதி விட்டனர்.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் நிச்சயமாக கூறுகிறேன். மனிதன் கலிமா தய்யிபாவைத் தெரிந்து கொண்டு செயல் ரீதியாக அதனை செயல்படுத்தினால் அதனால் மிகப்பெரும் முன்னேற்றம் பெற முடியும். இறைவனது வியக்கத்தக்க வல்லமைகளைக் காண முடியும்.

அவர்கள் கூறுகிறார்கள்: மிக நன்றாக அறிந்து கொள்ளுங்கள். நான் சாதாரண அறிவுரை கூறுபவனாக நிற்கவில்லை. நான் ஏதும் கதை சொல்வதற்காக நிற்கவில்லை. மாறாக, நான் சாட்சி கூறுவதற்காக நிற்கிறேன். அல்லாஹ்

எனக்கு தந்த தூதுச் செய்தியை உங்களிடம் சேர்க்க வேண்டியதுள்ளது. எவர் கேட்கிறாரோ இல்லையோ ஏற்கிறாரோ இல்லையோ என்பது குறித்து நான் பொருட்படுத்தமாட்டேன். அதற்கான பதிலை நீங்கள் தான் தரப் போகிறீர்கள். நான் எனது கடமையை நிறைவேற்ற வேண்டும். நிறைய பேர் ஜமாஅத்தில் இணைந்துள்ளார்கள். தவ்ஹீதை உறுதிப்படுத்தவும் செய்கிறார்கள் என்பதனை நான் அறிகிறேன். ஆனால் நான் மிகவும் பரிதாபத்துடன் கூறுகிறேன். அவர்கள் ஏற்கவில்லை. எவர் தனது சகோதரரின் உரிமையைப் பறிக்கிறாரோ, நம்பிக்கை மோசடி செய்கிறாரோ, பிற வகை தீமைகளிலிருந்து திரும்புவதில்லையோ, அவர் தவ்ஹீதை ஏற்றவர் என்று நான் உறுதி கொள்வதில்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: இறைவனை ஒருவன் என்று நம்புவதற்கு அவனது படைப்பினங்களின் உரிமையைப் பறிக்காமல் இருப்பதும் அவசியமாகும். எவர் தமது சகோதரரின் உரிமையைப் பறிக்கிறாரோ அவருக்கு நம்பிக்கைத் துரோகம் செய்கிறாரோ அவர் லாயிலாஹ இல்லல்லாஹ்வை ஏற்றுக் கொள்ளவில்லை. லாயிலாஹ இல்லல்லாஹ்வை ஏற்றுக் கொண்டவர், தவ்ஹீதை ஏற்றுக் கொண்டவர் ஏன் அடியார்களின் உரிமையைப் பறிக்கிறார்?

அவர்கள் கூறினார்கள்: இது எத்தகைய நிஃமத் எனில் இதனைப் பெற்ற உடனேயே மனிதனிடம் ஓர் அசாதாரணமான மாற்றம் ஏற்பட்டு விடுகிறது. லாயிலாஹ இல்லல்லாஹ்வின் கருத்தைப் புரிந்தால் உங்களிடம் அசாதாரணமான மாற்றம் ஏற்படும்.

அவர்கள் கூறினார்கள்: பகைமை, காழ்ப்புணர்ச்சி, பொறாமை கொள்வது போன்ற சிலைகள் இல்லையெனில் இறைவனது நெருக்கம் கிடைக்கிறது. இந்த மாற்றம் எப்போது ஏற்படும் என்றால், எப்போது அவர் உண்மையான ஏகத்துவம் உடையவராகிறார் எனில் உட்புற சிலைகளான பெருமை, சுயநலம், காட்டுதல், காழ்ப்புணர்ச்சி, பகைமை, பொறாமை, கருமித்தனம், நயவஞ்சகம், உடன்பாட்டை மீறுதல் போன்றவை அவரிடமிருந்து அகல வேண்டும்.

உண்மையான ஏகத்துவவாதியாவதற்கு அவர் பெருமையை விட வேண்டும். சுயநலத்தை விட வேண்டும். செயற்கைத்தனம் காட்டுதல் ஆகியவற்றை விட வேண்டும். காழ்ப்புணர்ச்சி –யையும் பகைமையையும் விட வேண்டும். ஒருவர் சமாதானத்திற்கு வந்தால் மன்னிப்புக் கேட்டால் மன்னிக்க வேண்டும். காழ்ப்புணர்வையும் பகைமையையும் உள்ளத்தில் கொள்ளக் கூடாது. பொறாமை மற்றும் கருமித்தனத்தை விட வேண்டும். நயவஞ்சகம் மற்றும் உடன்படிக்கை முறித்தலை விட வேண்டும். இவை அனைத்தையும் விட்டால் நீங்கள் உண்மையான ஏகத்துவம் உடையவராக ஆக முடியும். அப்போதுதான் லாயிலாஹ இல்லல்லாஹ்வின் கருத்தைப் புரிய முடியும்.

அன்னார் கூறுகிறார்கள்: இந்த சிலை உள்ளுக்குள் இருக்கும் போது லாயிலாஹ இல்லல்லாஹ் எவ்வாறு உண்மையாக இருக்க முடியும். ஏனெனில் அவரிடம் தவக்குல் (இறைவனிடம் பொறுப்புத் தேடுதல்) –ன் எதிர் நிலை காணப்படுகிறது. ஆகவே வெறுமனே இறைவனை தனித்தவனாகவும் இணையற்றவ –னாகவும் நம்புகிறேன் என்று வாயால் கூறுவது எந்தப் பயனும் தர முடியாது. அவர் வாயால் கலிமா சொன்னார். அப்போதே அவரது இயல்புக்கு மாற்றமாக ஏதாவது ஒன்று நடந்து விட்டால் பிறகு கோபத்தை இறைவனாக்கி விட்டார். (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 105; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

சுருக்கம் என்னவென்றால், மனிதனுக்குள் இருக்கும் மன எழுச்சியின் கிருமி இறையருள் இல்லாமல் அகல முடியாது. அல்லாஹ்வின் அருள் உண்மையான ஏகத்துவத்தில் நிலை நிற்காமல் கிடைக்க முடியாது. வெறும் லாயிலாஹ இல்லல்லாஹ் வாயினால் சொல்வதால் ஏகத்துவம் உடையவராகி விட முடியாது. ஏகத்துவமுடையவர் ஆவதற்கு அல்லாஹ்வை எல்லா ஆற்றல்களும் உடையவனாகவும் கருதுவது அவசியமாகும். அவனையே உண்மையான வணக்கத்திற்கு உரியவனாகக் கருதுவதும் அவசியமாகும். அல்லாஹ்வை எல்லா ஆற்றல்களின் உரிமையாளனாகக் கருதினால், உண்மையான வணக்கத்திற்குரியவனாகக் கருதினால் பிறகு

### திருக்குர்ஆனிலிருந்து...

*(செவியேற்பவரே!) உமக்கு எதனைப் பற்றிய அறிவு இல்லையோ, அதனைப் பின்பற்றாதீர். (ஏனென்றால்) காது, கண், மனம் இவை எல்லாவற்றையும் குறித்து (உம்மிடம்) விசாரிக்கப்படும். (17:37)*

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*எவர்கள் அந்த இறைவன் மீதுள்ள பேரன்பிலும் நேசத்திலும் தங்களை மாய்த்துக் கொள்கின் –றனரோ, மேலும் சுயமே தாங்கள் இருப்பது போன்றே அவனது ஏகத்துவம் மற்றும் கம்பீரம் வெளிப்பட வேண்டும் என்று விரும்புகின்றவர் –களாக இருக்கின்றனரோ அவர்களை தவிர வேறு எவருக்காகவும் இறைவன் தனது மகத்தான அடையாளங்களை வெளிப்படுத்துவதில்லை.....*

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

*பூமியில் ஆணவங்கொண்டு நடக்காதீர். ஏனென்றால், இதனால் நாட்டின் எல்லையையும், உம்மால் அடைந்து விட முடியாது. (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது. (17:38)*

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

*மேலும் (அல்லாஹ்வின் அடியார்களாகிய) அவர்கள் செலவு செய்யும்போது வீண் விரயம் செய்யவோ, கருமித்தனம் காட்டவோ செய்யாமல் அவ்விரண்டுக்கும் இடையில் நடுநிலையைக் கைக்கொள்வார்கள். (25:68)*

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

93600 05888
78716 00664
IBR
Construction Materials

எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிளாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

### திருக்குர்ஆனிலிருந்து...

*(நிராகரிப்பவர்களிடம்) கூறுவீராக: நீங்கள் பிரார்த்தனை செய்யா விட்டால் என் இறைவன் உங்களைப் பொருட்படுத்தவே மாட்டான். நீங்கள் (இறைத் தூதை) மறுத்து விட்டதால் தண்டனை உங்களைப் பற்றிக் கொள்ளும். (25:78)*

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

### திருக்குர்ஆனிலிருந்து...

*உங்களுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால் அது உங்கள் கைகள் சம்பாதித்தவற்றி(ன் விளைவி)னாலே ஆகும். அவன் (உங்கள் பாவங்களுள்) அதிகமானவற்றை மன்னிக்கிறான். (42:31)*

**S. முஹம்மது இஸ்மாயீல்**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

### திருக்குர்ஆனிலிருந்து...

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் எல்லாரும் முழுமையான கீழ்ப்படிதலுக்குள் வந்து விடுங்கள். ஷய்த்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லாதீர்கள். அவன் உண்மையிலேயே உங்களுக்கு (மிகவும்) பகிரங்கமான பகைவனாவான். (2:209)*

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

*மனிதன் நல்லதைக் கேட்பவதில் ஒருபோதும் சோர்வடைவதில்லை. ஆனால், அவனுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால், அவன் நம்பிக்கை இழந்து சோர்வடைந்து விடுகின்றான். (41:50)*

**S.H. வஸீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

உலகியல் தந்திரங்கள் மற்றும் சாக்குப்போக்குகள் மூலமாகவும் பல்வேறு வழிமுறை மூலமாகவும் பிற மனிதனின் உரிமையைப் பறிக்க இயலாது. ஆகவே தனது சகோதரரின் உரிமையை வழங்காதவர், சமாதானத்தின் பக்கம் அடியெடுத்து வைக்காதவர், பகைமையை முடிவுக்குக் கொண்டு வராதவர் தவ்ஹீதையும் ஒப்புக் கொண்டவர் அல்ல. அன்னார் கூறியதன் சுருக்கம் இதுதான். இது எத்தகைய கருத்து எனில் இதனைப் புரிந்து கொண்டால் நாம் எப்போதும் சமாதானத்திற்கு அடித்தளமிடுபவராகி விடுவோம். மற்றவரின் உரிமையை வழங்குபவராகி விடுவோம். நம்மில் ஒவ்வொருவரும் இந்தக் கருத்தைப் புரிந்தவாறு தம்மை ஆய்வு செய்வது அவசியமாகும். அது அல்லாமல் நம்மைப் பொருத்தவரை இது கவலைக்குரிய தருணமேயாகும். தவ்ஹீதை வாயினால் உறுதி கூறுகிறோம். ஆனால் செயலால் அதனை மறுக்கிறோம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்ற நூலில் தீமையை விடுவதன் வகைகளைக் கூறுகிறார்கள். அதில் ஒரு வகையை அன்னார் இவ்வாறு கூறுகிறார்கள்: அதாவது எவ்வாறு தீமையை விட வேண்டும் என்று கூறுகிறார்கள். அதற்கு பல வழிகள் உள்ளன. அவற்றில் ஒன்று இதுவாகும். மற்றவருக்கு அநீதியான முறையில் உடலளவில் ஊறு விளைவிக்காமல் இருத்தல், விஷமமற்றவராக இருத்தல், சமாதானமாக வாழ்தல் ஆகும்.

அதாவது எவ்வாறு வாழ்வைக் கழிக்க வேண்டும் என்றால் எவருக்கும் எந்த வகையிலும் அநீதியிழைக்கக் கூடாது. எவருக்கும் எந்த சேதமும் விளைவித்தல் கூடாது. மாறாக முழுமையான முறையில் விஷமமற்றவராக ஆகி விட வேண்டும். சமாதானத்தின் அடித்தளமிட வேண்டும். சமாதானத்துடன் வாழ்வைக் கழிக்க வேண்டும். ஒருவருக்கொருவர் அன்பு நேசத்தை வளர்க்க வேண்டும். இது அவசியமாகும்.

இது பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மேலும் கூறுகிறார்கள்: சந்தேகமின்றி சமாதானம் ஓர் உயர்ந்த நல்லொழுக்கமாகும். மனிதனுக்கு அது மிகவும் முக்கியமானதாகும். இந்த நல்லொழுக்கத்திற்கு பொருத்தமான நிலை, இயல்பான ஆற்றல் குழந்தைகளிடம் காணப்படுகிறது. இதனை சீர்படுத்துவதன் மூலம் அன்புப் பிணைப்பு என்ற நல்லொழுக்கம் உருவாகிறது. மனிதன் தனது இயல்பான நிலையில் அதாவது அறிவைப் பற்றி அறியாத நிலையில் சமாதானத்தின் கருத்தைப் புரிய முடியாது. யதார்த்தத்தின் கருத்தையும் புரிய முடியாது என்பது வெளிப்படையாகும்.

இது குழந்தைகளிடம் உருவாகி இருக்கக் கூடிய இயல்பாகும். அதாவது இந்த சமாதானம் மற்றும் சமாதானத்தின் பக்கம் முன்னேறுவது என்பது குழந்தைகளிடம் உருவாகிறது. அவர்கள் உடனேயே மறந்து விட்டு சமாதானத்தின் பக்கம் வருகின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: மனிதனிடம் அறிவு இல்லை எனில் சமாதானம் என்ற கருத்தைப் புரிய முடியாது. அதேபோன்று போரின் கருத்தையும் புரிய முடியாது. எப்போது சமாதானம் செய்ய வேண்டும்? எந்த நிலையில் போர் புரிய வேண்டும் என்றும் தெரியாது.

அவர்கள் கூறுகிறார்கள்: அப்போது குழந்தைப் பருவத்தில் இயல்பாகவே சமாதானத்தின் வழக்கத்திற்கு வேராக இருக்கக்கூடிய ஓர் ஒத்த பண்பு காணப்படுகிறது. அறிவும், திட்டமிடுதலும், குறிப்பான விருப்பத்துடனும் நிறைவேற்றப்படாத காரணத்தால் அது நல்லொழுக்கத்தில் சேராது. மாறாக மனிதன் தனது சுய விருப்பத்துடன் தன்னை தீங்கிழைக்காதவனாக ஆக்கிக் கொண்டு சமாதானத்தின் பண்பை அதற்குரிய இடத்தில் பயன்படுத்தும்போதுதான் அது நல்லொழுக்கத்தில் சேர்ந்ததாக இருக்கும். மனிதனிடம் அறிவோ அதற்கான ஆற்றலோ இல்லாத நிலையில் அவன் குழந்தையாக இருக்கும்போது அது உயர் நல்லொழுக்கமாக இருக்காது. எல்லா நிலைமைகளையும் ஆய்வு செய்து மனிதன் தாமே விரும்பி முயற்சி செய்து சமாதானத்திற்கு அடித்தளமிட்டு அதனை அதற்குரிய இடத்தில் பயன்படுத்தும்போதுதான் அது நல்லொழுக்கமாக இருக்கும். அல்லது சில வேளைகளில் நாட்டில் அல்லது சமுதாயத்தில் விரும்பாத நிலையிலும் போரின் சூழ்நிலை உருவாகி விடுகிறது. அப்போது அதற்காக முடிவு செய்கிறார்கள் எனில் அதுவும் நீதிக்கு அப்பாற்பட்டதல்ல. அறிவுக்கு அப்பாற்பட்டு அதை அவர்கள் செய்யவில்லை. மாறாக இடம், சூழ்நிலைக்கேற்ப சிந்தித்து அந்த முடிவு எடுக்கப்படுகிறது. சமாதானத்தின் அடித்தளமும் சரியான இடத்தில் அமைக்கப்பட வேண்டும். சரியான சந்தர்ப்பத்தில் இருக்க வேண்டும். அப்போது அதுதான் ஓர் உயரிய நல்லொழுக்கம் ஆகும்.

அவர்கள் கூறுகிறார்கள்: மனிதன் தனது விருப்பத்துடன் தன்னை எந்த தீங்கும் அற்றவனாக ஆக்கிக் கொண்டு சமாதானத்தினை அதற்குரிய இடத்தில் பயன்படுத்த வேண்டும். பொருத்தமற்ற இடத்தில் பயன்படுத்துவதை விட்டு விலகி இருக்க வேண்டும். இதில் அல்லாஹ் இவ்வாறு போதிக்கிறான். (8:2) وَاَصۡلِحُوۡا ذَاتَ بَیۡنِکُمۡ – உங்களுக்–கிடையில் சமாதானத்தை உருவாக்குங்கள். (4:129) وَالصُّلۡحُ خَیۡرٌ – சமாதானம் எவ்வாறிருப்பினும் சிறந்தது. (8:62) وَاِنۡ جَنَحُوۡا لِلسَّلۡمِ فَاجۡنَحۡ لَہَا அவர் சமாதானத்திற்காக குனிந்தால் நீங்களும் சமாதானத்திற்காக குனியுங்கள். எதிரிகள் சமாதானத்திற்காக இணங்கி வந்தால் அல்லது மறு தரப்பு சமாதானத்திற்கு திரும்பினால் பிறகு சமாதானம் செய்யுங்கள். (8:62) وَاِنۡ جَنَحُوۡا لِلسَّلۡمِ فَاجۡنَحۡ لَہَا

அல்லாஹ் கூறுகிறான்:
وَعِبَادُ الرَّحۡمٰنِ الَّذِیۡنَ یَمۡشُوۡنَ عَلَی الۡاَرۡضِ ہَوۡنًا – ரஹ்மானின் அடியார்கள் பூமியில் பணிவுடன், அடக்கத்துடன் நடக்கின்றனர். (25:64)

பிறகு அல்லாஹ் கூறுகிறான்:
وَاِذَا مَرُّوۡا بِاللَّغۡوِ مَرُّوۡا کِرَامًا – வீணாவற்றின் அருகே கடந்து சென்றால் அவர்கள் கண்ணியத்துடன் கடந்து சென்று விடுவார்கள். (25:73)

பிறகு அன்னார் இந்த வசனத்தை மேற்கோள் காட்டியுள்ளார்கள்:
اِدۡفَعۡ بِالَّتِیۡ ہِیَ اَحۡسَنُ فَاِذَا الَّذِیۡ بَیۡنَکَ وَ بَیۡنَہٗ عَدَاوَۃٌ کَاَنَّہٗ وَلِیٌّ حَمِیۡمٌ – மிகச் சிறந்ததைக் கொண்டு தற்காப்பு செய்யுங்கள். இதனால் எவருக்கு உம்முடன் பகைமை உள்ளதோ அவர் அவ்வாறு அழகிய முறையில் நடந்து கொள்வதன் மூலம் உற்ற நண்பராகி விடுவார். (41:35)

அன்னார் கூறுகிறார்கள்: ஒருவருக்கொருவர் சமாதானத்தை கடைபிடியுங்கள். சமாதானத்தில் நன்மை உள்ளது. சமாதானத்தின் பக்கம் குனிந்தால் நீங்களும் குனிந்து விடுங்கள். இறைவனது நல்லடியார்கள் பூமியில் சமாதானத்துடன் செல்கின்றனர். ஏதாவது வீணானவற்றை எவரிடமிருந்தேனும் கேட்டால், யுத்தத்தின் வழக்கு அல்லது சண்டையின் சந்தர்ப்பம் வந்தால் கண்ணியத்துடன் அவற்றை கடந்து செல்வார்கள். வீணான பேச்சுக்களைக் கேட்டால், சண்டை உருவாகும் வாய்ப்பு இருக்கும் என்றால் பிறகு அதிலிருந்து கண்ணியமாக விலகி ஒரு பக்கம் சென்று விடுவார்கள். சின்னச் சின்ன விஷயங்களில் சண்டையிட மாட்டார்கள். அதாவது எதுவரை அதிகமாக கஷ்டம் ஏற்படவில்லையோ அதுவரை பதிலுக்கு சண்டையிடுவதை நல்லதாகக் கருதுவதில்லை. சமாதானத்தின்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*என் கையில் ஒரு தீபம் உள்ளது. என்னிடம் வருபவர் அவ்வொளியிலிருந்து நிச்சயம் ஒளி பெறுவர். ஆனால் தவறான எண்ணத்தாலும் தீய யூகத்தாலும் விலகி ஓடுபவன் இருளில் எறியப்படுவான். இக்காலத்தின் உறுதி வாய்ந்த கோட்டை நானே....*

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஆதம்பாக்கம்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*திருக்குர்ஆனின் முக்கிய போதனைகளை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, ஓரிறைக் கொள்கை, இறை அன்பும், இறைவனுக்கு கட்டுப்படுதலும் ஆகும். மற்றொன்று தன் உடன்பிறப்புகளுக்கும் அயலாருக்கும் இரக்கம் காட்டுதல் ஆகும்.*

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.*

**M.Y. கன்சுல் ஆயிஷா**

சதர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

இடத்தைக் கண்டறிவதற்கு இதுவே விதிமுறை ஆகும். சின்னச் சின்ன விஷயங்களையெல்லாம் கருத்தில் கொள்ளக் கூடாது. மன்னிக்க வேண்டும். 'லகூ' என்ற சொல் இந்த இடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தெளிவு பெறுங்கள். அரபி மொழியில் 'லகூ' என்ற சொல்லை எந்த செயலுக்குப் பயன்படுத்துவார்கள் என்றால், உதாரணமாக ஒரு மனிதர் வாயினால் தீய வார்த்தையைக் கூறுகிறார். அல்லது துன்பம் இழைக்கும் நோக்கத்தில் கூறுகிறார். அதனால் அதிகமாக கஷ்டம் ஏற்படாமல் இருக்கிறது எனில் அத்தகைய வீணான அதிகம் நஷ்டம் தராத கஷ்டங்களை சகித்துக் கொள்ள வேண்டும். ஒருவர் சிறிதளவாவது நஷ்டத்தை ஏற்படுத்த முயற்சி செய்தாலும் அதனை கண்டும் காணாமல் விட்டு விடுங்கள். பெரிய மனிதத் தன்மையுடன் செயல்படுங்கள்.

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: ஒருவர் தீங்கு விளைவிக்கும் நோக்கத்துடன் ஏதாவது பேசுகிறார் எனில் நீங்கள் நல்ல முறையில் சமாதானத்துடன் அவருக்கு பதில் தாருங்கள். இவ்வாறு செய்வதால் பகைவனும் நண்பனாகி விடுவான். (இஸ்லாமி உஸூல் கீ ஃபிலாஸஃபி. ரூஹானீ கஸாயின் தொகுதி 10 பக்கம் 348-349)

பின்னார் அன்னார் ஓரிடத்தில் கூறுகிறார்கள்: இந்த ஜமாஅத்தை ஆயத்தம் செய்ததன் நோக்கம் நாவு, காது, கண் ஒவ்வோர் உறுப்பிலும் தக்வா ஊடுருவி விட வேண்டும். தக்வாவின் ஒளி அதன் உள்ளேயும் வெளியிலும் இருக்க வேண்டும். நல்லொழுக்கத்தின் உயரிய முன்மாதிரியாக இருக்க வேண்டும். அளவு கடந்த கோபம் முற்றிலும் கூடாது.

அன்னார் கூறுகிறார்கள்: ஜமாஅத்தில் பெரும்பாலாரிடம் கோபம் என்னும் குறை இப்போதும் உள்ளது. சின்னச் சின்ன விஷயங்களின் காழ்ப்புணர்ச்சியும், பகைமையும் உருவாகி விடுகிறது. ஒருவருக்கொருவர் சண்டையிடத் தொடங்கி விடுகின்றனர். அத்தகையவருக்கு ஜமாஅத்துடன் எந்தப் பங்கும் இல்லை.

ஒருவர் ஏசினால் மற்றவர் அமைதியாக அவருக்கு பதில் சொல்லாமல் இருந்தால் அவருக்கு என்ன கஷ்டம் வரப் போகிறது என்று என்னால் புரிய முடியவில்லை. ஒவ்வொரு ஜமாஅத்தின் சீர்திருத்தமும் முதலில் நல்லொழுக்கத்தில் இருந்துதான் ஆரம்பமாகிறது. ஆரம்பத்தில் பொறுமையில் முன்னேற வேண்டும். மிகச் சிறந்த வழியாவது ஒருவர் தவறாகப் பேசினால் அல்லாஹ் அவரை சீர்திருத்துவதற்காக உள்ளத்து வேதனையுடன் துஆ செய்ய வேண்டும். உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சியை ஒருபோதும் வளர்க்க வேண்டாம்.

அன்னார் கூறுகிறார்கள்: "உலகில் ஒரு சட்டம் இருப்பது போன்றே இறைவனுக்கும் ஒரு சட்டம் உள்ளது. உலகம் தனது சட்டத்தை விடாத போது இறைவன் மட்டும் தனது சட்டத்தை ஏன் விட வேண்டும்?" ஆகவே எதுவரை மாற்றம் ஏற்படவில்லையோ அதுவரை அவனிடத்தில் உங்களுக்கு மதிப்பு இல்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: "சகிப்புத்தன்மை, பொறுமை, கண்டும் காணாமை ஆகிய பண்புகளின் இடத்தில் மிருகத்தனம் இருப்பதை இறைவன் ஒருபோதும் விரும்ப மாட்டான். நீங்கள் அழகிய நல்லொழுக்கங்களில் முன்னேறுவீர்கள் எனில் மிக விரைவில் இறைவன் வரை சென்றடைவீர்கள்." (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 127-128; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஆகவே, நமது நோக்கம் அன்னாரின் ஜமாஅத்தில் இணைவதும், இறைவனை திருப்திப்படுத்துவதும், உண்மையான தவ்ஹீதை உள்ளத்தில் நிலைநாட்டுவதும் ஆகும். பிறகு அன்னார் கூறியது போன்று இந்த நல்லொழுக்கங்களைக் கடைபிடிக்க வேண்டும். இது அடியார்களுக்குள்ள உரிமையுடன் தொடர்புடையதாகும். இது மற்றவரின் உரிமையை வழங்குவதன் மூலமே கிடைக்கிறது.

அன்னார் ஒரு சந்தர்ப்பத்தில் போதனை செய்தவாறு கூறினார்கள்: "ஒருவர் என்னுடன் தொடர்பை ஏற்படுத்தி எனது படையில் சேர்ந்ததாக வாதம் செய்கின்றார் என்றால், பிறகு அவர் நல்லொழுக்கத்தைக் கடைபிடித்தே ஆக வேண்டும். குழப்பம், கிளர்ச்சியின் நிலையையே விட்டு விட வேண்டும்."

அன்னார் தன்னுடன் தொடர்பு வைத்திருப்பவர் –களிடம் கூறினார்கள்: "அவர் உள்ளத்தைத் தூய்மைபடுத்த வேண்டும். தனது மனித நேயத்தை மேம்படுத்த வேண்டும். வேதனையுற்றவருக்காக அனுதாபம் காட்ட வேண்டும். பூமியில் சமாதானத்தைப் பரப்புங்கள். இதனால் அவனது மார்க்கம் பரவும்; அதாவது இஸ்லாம் பரவும்; தப்லீகிற்கான வழி பிறக்கும்." (கவர்மெண்ட் அங்குரஸி அவ்ர் ஜிஹாது. ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 15)

அன்னார் கூறினார்கள்: "எழுங்கள், தவ்பா செய்யுங்கள். தமது எஜமானனை நல்ல பணிகளால் திருப்திப்படுத்துங்கள்." (லெக்ஸர் லாஹூர். ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 174)

பிறகு ஓரிடத்தில் தமது ஜமாஅத்திற்கு காழ்புணர்ச்சியையும் பகைமையையும் அகற்றுவது, மனித குலத்தின் மீது அனுதாபம் காட்டுவது, சமாதானத்திற்கு அடித்தளமிடுவது இவற்றிற்கான அறிவுரையைக் கூறியவாறு அன்னார் கூறினார்கள்:

"என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹாக ஒப்புக் கொண்டிருக்கிற என்னுடைய ஜமாஅத்திற்குக் குறிப்பாக புரிய வைக்கிறேன். அவர்கள் எப்போதும் தூய்மையற்ற வழக்கங்களை விட்டு விடட்டும். என்னை இறைவன், மஸீஹ் மவ்ஊது ஆக்கி அனுப்பியுள்ளான். மர்யமின் மகன் மஸீஹின் ஆடையை எனக்கு அணிவித்துள்ளான். எனவே நான் போதனை செய்கிறேன். நீங்கள் விஷமத்திலிருந்து விலகுங்கள். மனித குலத்துடன் அதற்குரிய உரிமையுடன் அனுதாபம் காட்டுங்கள். உங்கள் உள்ளத்தைக் காழ்ப்புணர்ச்சி மற்றும் பகைமையிலிருந்து தூய்மை செய்யுங்கள். இந்த வழக்கத்தால் நீங்கள் மலக்குகளைப் போன்று ஆகி விடுவீர்கள். மனித நேயம் இல்லாத மார்க்கம் எத்தனை அசுத்தமான தூய்மையற்ற மார்க்கம்! மன எழுச்சிகளின் முட்கள் நிறைந்துள்ள பாதை எத்துனை அசுத்தமான தூய்மையற்ற பாதை! ஆகவே என்னுடன் இருப்பவர்கள் அவ்வாறு இருக்காதீர்கள். மார்க்கத்தால் நீங்கள் பெற்றது என்ன என்பதைப் பற்றி சிந்தியுங்கள். எப்போதும் பிறரது உள்ளத்தைப் புண்படுத்துவது உங்கள்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

S. MABU
87541 71700
81240 22479
90955 89992
78719 66352
STAR ORGANIC
TERRACE GARDEN DIVISION
◗ Panchagavya
◗ Pest Repeller
◗ See Veed Extract
◗ All kinds of garden tools
Email: Starorganicmabu@gmail.com
THARPOLIN + POULTRY
EQUIPMENTS SALES
TIRUNELVELI DIST.

Classic Mobile's & Watch,
Hiba watch & Mobiles
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

halal Grill house
multi cuisine family restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

### திருக்குர்ஆனிலிருந்து...

உம்முடைய இறைவன், தான் விரும்புபவருக்கு உணவைத் தாராளமாக வழங்குகின்றான். மேலும், (தான் விரும்புபவருக்கு அவற்றைக்) குறைவாகக் கொடுக்கின்றான். நிச்சயமாக, அவன் தன் அடியார்களை நன்கு அறிந்து கொள்பவனும், நன்கு பார்ப்பவனும் ஆவான். (17:31)

**முஹம்மது ஆதில்**

சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், சூலூர்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என நீங்கள் ஒருபோதும் கருத வேண்டாம். நீங்கள் உண்மையில் இறைவன் தன் கரத்தினால் மண்ணில் விதைத்த விதையே. இறைவனின் இந்த விதை முளைக்கும்; பூக்கும்.... பின்னர் வலுவானதொரு மரமாகி விடும் என்று கூறியுள்ளான்.

**அட்வகேட் சலீம் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் அளந்து கொடுக்கும் போது, அளவை முழுமையாகக் கொடுங்கள். (நீங்கள் நிறுத்துக் கொடுத்தாலும்) சரியான தராசு கொண்டு நிறுத்துக் கொடுங்கள். இவ்வாறு செய்வது மிக்க நல்லதும், முடிவைப் பொருத்தவரை மிகச் சிறந்ததுமாகும். (17:36)

**M.Y. ஷாஹுல் ஹமீது**

மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

**ALIF AUTO CARE**
Pudupet, Chennai.
Ph: 98847 74525

**CITY HARDWARE STORE'S**
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219


## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நபி இறைவனின் வடிவத்தைப் பார்ப்பதற்கான கண்ணாடியாக இருக்கின்றார். இந்த கண்ணாடியின் மூலமாக இறைவனின் முகம் தென்படுகின்றது.

**மர்ஹூம் A.N.A. ஹா:பிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

இவ்வுலக வாழ்க்கையிலும், சாட்சிகள் எழுந்து நிற்கும் நாளிலும் நிச்சயமாக நாம் தூதர்களுக்கும் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் உதவி செய்வோம். (40:52)

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) உமக்கு எதனைப் பற்றிய அறிவு இல்லையோ, அதனைப் பின்பற்றாதீர். (ஏனென்றால்) காது, கண், மனம் இவை எல்லாவற்றையும் குறித்து (உம்மிடம்) விசாரிக்கப்படும். (17:37)

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.

**ஜலாலுத்தீன்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.


0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com

**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE



276, N.H. Road, Coimbatore - 641 001.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

**O.A.N. DOORS & STEELS**



All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.


## திருக்குர்ஆனிலிருந்து...

தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத்தைக் கொடுங்கள். நீங்கள் உங்களுக்காக முன் கூட்டியே அனுப்பும் நன்மையையே நீங்கள் அல்லாஹ்விடம் பெற்றுக் கொள்வீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் செயல்களைப் பார்ப்பவனாவான். (2:111)

**முஹம்மது ஹுஸைன்**
பழனி


Q4Q
Bamboo Village
MULTI CUISINE RESTAURANT

Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com


## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

எவர்கள் அந்த இறைவன் மீதுள்ள பேரன்பிலும் நேசத்திலும் தங்களை மாய்த்துக் கொள்கின் -றனரோ, மேலும் சுயமே தாங்கள் இருப்பது போன்றே அவனது ஏகத்துவம் மற்றும் கம்பீரம் வெளிப்பட வேண்டும் என்று விரும்புகின்றவர் -களாக இருக்கின்றனரோ அவர்களை தவிர வேறு எவருக்காகவும் இறைவன் தனது மகத்தான அடையாளங்களை வெளிப்படுத்துவதில்லை.....

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.


A.M. Zakir Hussain
✆ +91 98429 41237

**METAPLAST**
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP

# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com


## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

வானத்தில் இறைவன் உங்கள் மீது திருப்தி கொள்ள வேண்டுமென்று எண்ணினால் நீங்கள் ஒருவருக்கொருவர் ஒரே வயிற்றில் பிறந்த இரு சகோதரர்களைப் போல் ஆகிவிடுங்கள்.

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.


**ரஹ்மானியா**
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.

S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769


## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஓரிறைக் கொள்கை ஓர் ஒளியாகும். அது அகத்திலும் புறத்திலும் உள்ள பொய்க் கடவுள்களை மறுப்பதன் பின் உள்ளத்தில் உருவாகிறது. பின்னர் அது மனித உடலின் ஒவ்வொரு அணுவிலும் பரவி விடுகிறது. எனவே இதனை அல்லாஹ் மற்றும் அவனின் தூதர் மூலமேயன்றி மனித ஆற்றல்களால் எவ்வாறு பெற முடியும்?

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

எங்கள் இறைவன் அல்லாஹ் எனக் கூறி, இக்கொள்கையில் நிலைத்திருப்பவர் -களிடம், நீங்கள் அஞ்சவும் வேண்டாம்; கவலையடையவும் வேண்டாம். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கத்தைப் பற்றிய நற்செய்திகளை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று (கூறியவாறு) வானவர்கள் இறங்குவர். (41:31)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

பூமியில் ஆணவங்கொண்டு நடக்காதீர். ஏனென்றால், இதனால் நாட்டின் எல்லையையும், உம்மால் அடைந்து விட முடியாது. (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது. (17:38)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

முஸ்லிம், கிறித்தவர், இந்து, ஆரியர் ஆகிய எல்லாருக்கும் நான் ஒன்றைத் தெளிவுபடுத்துகிறேன். உலகில் எவரும் எனக்குப் பகைவர் இல்லை. பாசமிக்க தாய் ஒருத்தி தன் குழந்தைகளை நேசிப்பதை விட மிகுதியாக மனிதயினத்தை நான் நேசிக்கிறேன்....

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.


M. Abdul Raoof
✆ +91 9362 2272 29

SUCCESS INDIA
PROMOTERS

Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

# ஒரே அமர்வில் மூன்று தலாக் கொடுப்பது தொடர்பாக ஷரீஅத் கூறுவது என்ன? மற்றும் பெண்களின் உரிமைகள்

❖ ❖ ❖ மன்சூர் அஹ்மது மஸ்ரூர் (ஆசிரியர், பத்ர் வார இதழ் - உருது பதிப்பு) ❖ ❖ ❖

***(பாகம் – 3)***

கடந்த இதழில் நாம் திருமணம் நடைபெறும் சமயத்தில் மணமகன், மணமகள் ஆகிய இருவரிடத்திலும் திருமணத்திற்கான சம்மதம் கேட்கப்படும்போது மணவிலக்கு கொடுக்கப்படும் சமயத்தில் பெண்ணிடம் அதற்கான சம்மதத்தை ஏன் கேட்பதில்லை? என்ற ஆட்சேபனைக்கு நாம் பதில் கூறியிருந்தோம். மேலும், தலாக் ஆக இருந்தாலும் சரி அல்லது குலாவாக இருந்தாலும் சரி இந்த தருணத்தில் இஸ்லாம் மனைவிக்குரிய உரிமைகளைச் சிறந்த முறையில் பாதுகாத்துள்ளது என்று நாம் கூறியிருந்தோம்.

இவ்விடத்தில் தலாக் தொடர்பாக நாம் மேலும் கூறுவது என்னவென்றால், திருக்குர்ஆன் தலாக் அல்லது குலா தொடர்பாக முடிவு எடுப்பதற்கு முன்னதாக கணவருக்கும் மனைவிக்குமிடையில் சமாதானம் செய்து வைப்பதற்கு முழுமையாக முயற்சி செய்ய வேண்டும் என்று அது கஸாவிற்கு (நீதித் துறைக்கு) கவனமூட்டியிருக்கின்றது.

இது தொடர்பாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

وَاِنْ خِفْتُمْ شِقَاقَ بَيْنِهِمَا فَابْعَثُوْا حَكَمًا مِّنْ اَهْلِهٖ وَحَكَمًا مِّنْ اَهْلِهَا ۚ اِنْ يُّرِيْدَاۤ اِصْلَاحًا يُّوَفِّقِ اللّٰهُ بَيْنَهُمَا ؕ اِنَّ اللّٰهَ كَانَ عَلِيْمًا خَبِيْرًا ○

பொருள்: (கணவன் மனைவியாகிய) அவ்விருவருக்கிடையில் பிரிவு ஏற்பட்டு விடுமோ என்று நீங்கள் அஞ்சினால் அவனுடைய குடும்பத்தினரிலிருந்து நடுவர் ஒருவரையும் அவளுடைய குடும்பத்தினரிலிருந்து நடுவர் ஒருவரையும் நீங்கள் நியமியுங்கள். அவ்விருவரும் இணக்கத்தை விரும்பினால் (கணவன் மனைவி ஆகிய) அவ்விருவருக்கிடையில் அல்லாஹ் ஒற்றுமையை உருவாக்கி விடுவான். நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிபவனும் நன்கு உணர்த்துபவனுமாவான். (4:36)

இந்த வசனத்தில் அல்லாஹ் கணவனுக்கும் மனைவிக்குமிடையில் சமாதானம் செய்து வைக்குமாறு கட்டளையிட்டுள்ளான். சில நேரங்களில் விஷயம் மிகவும் சாதாரணமாக இருக்கும். ஆனால், கணவன் மனைவி தங்களது அகந்தை மற்றும் பிடிவாதத்தின் காரணமாக பிரிந்து விட வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருக்கின்றனர். காரணமில்லாமல் விஷயத்தை நீளமாக்கிக் கொண்டே செல்கின்றனர். அவர்களுக்கு தலாக் அல்லது குலாவைப் பெற்றுத் தருவதற்கு எந்தவொரு அறிவுப்பூர்வமான மற்றம் ஆகுமான காரணம் இருப்பதில்லை. பிறகு அவர்களிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யப்படும்போது மற்றும் குடும்பத்திலுள்ள பெரியவர்கள் அவர்களுக்குப் புரிய வைக்கும் போது, பிறகு கணவனும் மனைவியும் புரிந்து கொள்கின்றனர். மேலும், தங்களுக்கிடையில் சமாதானம் செய்து கொள்கின்றனர். எனவே, இது மிகவும் நுட்பமான போதனையாகும். அதாவது, கணவனுக்கும் மனைவிக்குமிடையில் தலாக் அல்லது குலா தொடர்பாக முடிவெடுப்பதற்கு முன்னதாக விவகாரங்களை மிகவும் நுட்பமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதற்குப் பிறகு அவர்களிடம் சமாதானத்தை ஏற்படுத்த முழுமையாக முயற்சி செய்ய வேண்டும்.

பிறகு வேறு வழியில்லாமல் ஆண் தலாக் கொடுத்து விட்டாலும் கூட அவர் பேண வேண்டிய திருக்குர்ஆனின் கட்டளை لَا تُخْرِجُوْهُنَّ مِنْ بُيُوْتِهِنَّ وَلَا يَخْرُجْنَ அதாவது ஆண் தலாக் கொடுக்கப்பட்ட பெண்ணை வீட்டிலிருந்து வெளியேற்றி விடக் கூடாது. சுயமே அந்தப் பெண்ணும் கூட வீட்டிலிருந்து வெளியேறிச் செல்லக் கூடாது என்பதாகும். 'இத்தா' இருக்கும்போது மூன்று மாதங்கள் வரை பெண் தனது கணவனின் வீட்டிலேயே இருந்து வர வேண்டும். ஒருவேளை ஏதாவதொரு சமயத்தில் உள்ளத்திலுள்ள துக்கம் அகன்று பரஸ்பரம் அவர்களுக்கிடையில் சமாதானம் ஏற்பட்டு விடலாம் என்பது இந்த போதனையில் இருக்கின்ற இன்னொரு ஞானமிக்க அம்சமாகும்.

வாசகர்களே! சற்று சிந்தனை செய்து பாருங்கள். ஒருபுறம் அல்லாஹ் தலாக் அல்லது குலா தொடர்பாக முடிவு எடுப்பதற்கு முன்னதாக கஸா (நீதித்துறை) அவர்களிடம் சமாதானம் செய்து வைக்க வேண்டும் என்று கட்டளை இடுகின்றது. ஆணுக்கு தலாக் கொடுக்கப்பட்ட பெண்ணை வீட்டிலிருந்து அவன் வெளியேற்றக் கூடாது என்று கட்டளையிடுகின்றான். ஏனென்றால் ஒன்றாக இருக்கும்போது ஏதாவதொரு சமயத்தில் அவர்களுக்கிடையில் சமாதானம் ஏற்பட்டு விடலாம். இவ்வாறிருக்க பிறகு மறுபுறம் அல்லாஹ் ஒரே சபையில் மூன்று தலாக் கொடுக்கலாம் என்ற கட்டளையை எவ்வாறு பிறப்பித்திருக்க முடியும்? எனவே, ஒரே அமர்வில் மூன்று தலாக் கொடுப்பது ஷரீஅத் கூறியிருக்கும் கட்டளை அல்ல. மாறாக, இது பொதுமக்களின் புரியாத தன்மையும் அறியாமையும் மட்டுமேயாகும். இந்த புரியாத நிலை மற்றும் அறியாமையின் காரணமாக ஹலாலா போன்ற மிகவும் அசுத்தமான மற்றும் மிகவும் வெட்கக் கேடான சடங்கு உருவானது.

ஒரு ஆண் கோபத்தில் தனது மனைவிக்கு ஒரே சபையில் ஒன்றாக மூன்று முறை தலாக் கொடுத்து விடுகின்றார். கோபம் தணிந்த பிறகு தனது செயலை எண்ணி அவர் வருந்துகின்றார். பிறகு தனது இந்த மனைவியுடன் அவர் வாழ விரும்புகிறார். அத்தகைய தருணத்தில் ஹலாலா சடங்கு நடத்தப்படுகின்றது. ஏனென்றால், அவர்களின் பார்வையில் 'தலாக்கே பத்தா' (நிரந்தர மணவிலக்கு) அவர்களிடையே ஏற்பட்டு விட்டதால், அவர்களுக்கிடையில் நிரந்தர பிரிவு ஏற்பட்டு விட்டதால் இந்த பெண்ணை திருமணம் செய்து கொள்வதற்காக ஒரு ஆணை ஏற்பாடு செய்கின்றனர். அவர் அந்தப் பெண்ணை திருமணம் செய்து ஒரு நாள் அவளை தன்னுடன் வைத்து கொண்டு பிறகு அவருக்கு தலாக் கொடுத்து விடுகின்றார். இஸ்லாத்தில் இதுபோன்ற தற்காலிக திருமணம் கடுமையாக தடை செய்யப்பட்டிருக்கின்றது. அது ஹராமான (தடுக்கப்பட்ட) நிக்காஹ் ஆகும். அது விபச்சாரத்தின் ஒரு வடிவமாகவே இருக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹலாலா செய்பவரையும், ஹலாலா செய்ய வைப்பவரையும் சபித்துள்ளார்கள். ஹதீஸின் சொற்கள் இவையாகும்:

عَنْ عُقْبَةَ بْنِ عَامِرٍ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اَلَا اُخْبِرُكُمْ بِالتَّيْسِ الْمُسْتَعَارِ؟ قَالُوْا بَلٰى يَا رَسُوْلَ اللّٰهِ- قَالَ هُوَ الْمُحَلِّلُ، لَعَنَ اللّٰهُ الْمُحَلِّلَ وَالْمُحَلَّلَ لَهٗ-

ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாடகைக்கு விடப்படுகின்ற சந்தை மாடுகள் பற்றி நான் உங்களுக்குக் கூற வேண்டாமா? என்று கேட்டார்கள். சஹாபாக்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! கண்டிப்பாகக் கூறுங்கள் என்று கூறினர். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்கள், 'ஹலாலா செய்பவர்கள் ஆவர்' என்று கூறினார்கள். பிறகு ஹலாலா செய்பவரையும் எவருக்காக ஹலாலா செய்யப்படுகிறதோ அவரையும் அல்லாஹ் சபிப்பானாக என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இவ்விடத்தில் ஓர் ஆட்சேபனைக்கான பதிலை நாம் தர இருக்கின்றோம். சில மக்கள் அறியாமையின் காரணமாக இஸ்லாத்தில் ஆணுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கின்றது. அவர் எப்போது விரும்பினாலும் தனது மனைவியைக் கை விட்டு விடலாம். ஆனால் மனைவி எவ்வளவுதான் விரும்பினாலும் தனது கணவனை விட்டுப் பிரிய முடியாது. அவரை விட்டு விட்டுச் செல்ல முடியாது என்று ஆட்சேபனை செய்கின்றனர். இந்த ஆட்சேபனை முழுக்க முழுக்க அறியாமையின் அடிப்படையில் செய்யப்பட்டதாகும். இந்த ஆட்சேபனைக்கு பதிலாக நாம் இதை கூறிக் கொள்கின்றோம். இஸ்லாம் பெண்ணுக்கு குலாவிற்கான உரிமையைத் தந்திருக்கின்றது. எவ்வாறு இஸ்லாம் ஆணுக்கு தலாக் கொடுப்பதன் மூலமாக தனது மனைவியை விட்டுப் பிரிந்து செல்வதற்கான உரிமையை வழங்கி இருக்கின்றதோ அவ்வாறே பெண்ணுக்கும் கூட குலாவின் மூலமாக தனது கணவனை விட்டுப் பிரிந்து செல்வதற்கான உரிமையை வழங்கி இருக்கின்றது. இஸ்லாத்தின் இறைவன் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். எனவேதான் அவன் தலாக் மற்றும் குலாவிற்கான சட்டங்களை வைத்தான். திருமணத்தை பல ஜென்மங்கள் வரை தொடருகின்ற உறவாக அவன் ஆக்கவில்லை.

ஒரு பெண் குலா பெற்றுக் கொள்ளும்போது ஓர் ஆண் அந்த பெண்ணை விட்டுப் பிரிந்து செல்ல விரும்பவில்லையென்றால் அந்நிலையில் அந்த பெண்ணை அந்த ஆணுடன் வாழுமாறு நாம் வற்புறுத்த முடியுமா? அவ்வாறு செய்ய முடியாது என்பது வெளிப்படையான விஷயமாகும். அவ்வாறு செய்தால் அது மிகப்பெரும் அநீதியாக இருக்கும். பிறகு வெறுமனே சம்மதத்தை மட்டும்

தெரிந்து கொள்வதால் என்ன பயன் ஏற்பட போகின்றது? எனினும் நாம் இதனை கண்டிப்பாக கூறுகின்றோம். தலாக் தொடர்பான விவகாரமாக இருந்தாலும் சரி, நீதிமன்றம் ஒவ்வோர் அம்சத்தின் அடிப்படையிலும் நன்றாக ஆய்வு செய்து பார்த்து ஒவ்வொருவருக்கும் அவருக்கு உரிய உரிமையைப் பெற்றுத் தர வேண்டும்.

குலா பெற்றுக் கொள்வதற்கான உரிமையை வழங்கி இஸ்லாம் பெண்ணின் மீது பேரருள் செய்துள்ளது. அதாவது, பெண்ணுக்கு ஆணுக்கு எதிரில் சமமான உரிமையை அது வழங்கி இருக்கின்றது. இதுபோன்ற உதாரணத்தை வேறு ஏதாவதொரு மதத்தில் நம்மால் பார்க்க முடியுமா? எனவே, இஸ்லாம் முஸ்லிம் பெண்களுக்கு சமமான உரிமையை வழங்கவில்லை என்று கூறுவது அநீதியாகும்.

ஹதீஸில் இவ்வாறு வருகின்றது: ஜமீலா பின்த் சுலூல் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களிடம் எனக்கு எனது கணவரான ஸாபித் பின் கைஸ் அவர்களின் மார்க்கப் பற்று மற்றும் நல்லொழுக்கம் பற்றி எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால் எனது இயல்பு அவருடன் ஒத்துப் போகவில்லை. எனவே, இத்தகைய நிலைமைகளில் என்னால் அவருக்குரிய உரிமைகளைச் செலுத்த முடியாது. எனவே, என்னை அவரை விட்டுப் பிரித்து விடுங்கள் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் தனது கணவரை விட்டுப் பிரிந்து செல்ல அவர்களுக்கு செய்ய வேண்டியவற்றை செய்தார்கள். (புகாரி கிதாபுத் தலாக் பாபுல் குலா ஃபிக்ஹ் அஹ்மதிய்யா Personal Law பக்கம் 84)

Fiqha Ahmadiyya Personal Law -வின் பிரிவு எண் 37 -ன் கீழ் இவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றது. குலாவிற்கான தீர்ப்பைக் கூறுவதற்கு காஸிக்கு இந்த அளவு திருப்தி ஏற்படுவது போதுமானதாகும். அதாவது, பெண் சுயமே தனது சுதந்திரமான கருத்தின் அடிப்படையில் தனது கணவரிடமிருந்து பிரிவதற்கு குலா பெற விரும்புகின்றார் என்பதை காஸி உறுதி கொள்வது போதுமானதாகும். குலாவிற்கான கோரிக்கைக்கு வேறு ஏதாவது ஒரு காரணத்தை வெளிப்படுத்திக் கூற வேண்டும் என்பதோ அல்லது ஏதாவது ஆதாரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதோ கட்டாயமானது அல்ல.

எனவே, இது எந்த அளவு மகத்துவமிக்க ஞானம் நிறைந்த போதனையாக இருக்கின்றது. அதாவது, பெண் தனியாக பிரிந்து செல்ல விரும்பினால் அவ்வாறு பிரிந்து செல்வதற்கு ஆணின் சம்மதம் தேவையில்லை. அவளுக்கு இந்த உரிமை எல்லா நிலைமையிலும் கிடைக்கும். Fiqha Ahmadiyya Personal Law -ன் 85 -வது பக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றது.

குலா தொடர்பான கருத்தை பொருத்த வரையில் எவ்வாறு ஆணுக்கு தலாக் கொடுப்பதற்கான உரிமை இருக்கின்றதோ அவ்வாறே பெண்களுக்கு குலாவிற்கான கோரிக்கையை வைப்பதற்கான உரிமை இருக்கின்றது. எவ்வாறு ஒரு ஆண் தலாக் கொடுப்பதை எவராலும் தடுக்க முடியாதோ அவ்வாறே பெண் குலா பெறுவதிலிருந்தும் எந்த நபரும் அவளைத் தடுத்து நிறுத்த முடியாது.

குலா பெறுகின்ற நிலையிலும் இஸ்லாம் பெண்களுக்கான உரிமைகளை முழுமையாகக் கருத்தில் கொண்டிருக்கின்றது. பொதுவான நிலைமைகளில் ஒரு பெண் குலா பெறுகின்ற நிலையில் பெண்ணுக்கு தனக்குரிய மஹர் (மணமகன் மணமகளுக்குத் திருமணத்தின்போது கட்டாயமாக தரவேண்டியதொன்றை) விட வேண்டியது வருகின்றது. ஆனால், ஆண் வரம்பு மீறி அநீதியிழைத்தன் காரணமாக ஒரு பெண் குலா பெறுகின்றார் என்றால் அந்நிலையில் அவளுக்குரிய முழுமையான மஹர் அவளுக்கு பெற்றுத் தரப்படுகிறது. Fiqha Ahmadiyya Personal Law -ன் பிரிவு எண் 38 -ன் கீழ் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: “கணவரின் அநீதி மற்றும் கொடுமை இழைத்தல் ஆகியவற்றின் காரணமாக பெண் குலா வாங்கும் கட்டாயத்திற்கு ஆகியுள்ளார் என்றால் பிறகு அவன் குலா பெறுகின்ற நிலையில் காஸி அவளுக்குரிய மஹரையும் பெற்றுத் தர முடியும்.”

எனவே தலாக் கொடுப்பதாக இருந்தாலும் சரி அல்லது குலா பெறுவதாக இருந்தாலும் சரி இஸ்லாம் பெண்களுக்கான உரிமைகளை முழுமையாக கருத்தில் கொண்டிருக்கின்றது. மேலும், அவனது உரிமைகளைப் பாதுகாப்பதில் அது கவனக்குறைவுடன் நடந்து கொள்ளவில்லை. அவ்வாறே அது அதில் எந்தக் குறையும் வைக்கவில்லை. இங்கு இதைக் கூறுவது அவசியமானதாகும். அதாவது ஒரு முஸ்லிம் ஆண் தனது மனைவிக்கு நாவினால் அல்லது எழுத்தின் மூலமோ தலாக் கொடுக்கும்போது பிறகு எந்த நாளிலிருந்து மனைவிக்கு அது பற்றிய தகவல் கிடைக்கின்றதோ அந்த நாளிலிருந்தே தலாக் கொடுக்கப்பட்ட பெண் இத்தா இருப்பதற்கான நாட்கள் ஆரம்பமாகி விடுகின்றது. ஆனால் பெண் வாய்வழியாக அல்லது எழுத்து மூலமாக தனது கணவருக்கு, தான் குலா பெற்றுக் கொள்வது பற்றிய தகவலைக் கொடுத்தாலும் அதனால் உடனடியாக குலா நடைமுறைக்கு வராது. குலா பெருவதற்கு பெண் கஸாவில் (நீதித்துறையில்) தனது விவகாரத்தை எடுத்து வைக்க வேண்டியது அவசியமானதும் கட்டாயமானதுமாகும். எதுவரை கஸா (நீதித் துறை) தனது தீர்ப்பை கூறவில்லையோ அதுவரை குலா பெறுவது நடைமுறைக்கு வராது. இதனை வேறு சொற்களில் கூறுவதாக இருந்தால் ஆண் தலாக் கொடுத்ததும் தலாக் நடைமுறைக்கு வந்து விடுகின்றது. ஆனால் பெண் குலா பெற வேண்டும் என்று கூறியதும் குலா நடைமுறைக்கு வராது. இதன் மூலம் வெளிப்படையாகப் பார்க்கும்போது ஆணுக்கு முழுமையான சுதந்திரம் வழங்கப் -பட்டிருக்கின்றது என்றும், பெண்ணுக்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருப்பது போன்றும் தோன்றுகிறது. மேலும் பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையில் ஒரு வித்தியாசம் வைக்கப்பட்டிருக்கின்றது என்ற ஓர் தாக்கம் ஏற்படுகின்றது. ஆனால், ஒருபோதும் அவ்வாறு அல்ல. இஸ்லாத்தின் எந்த ஒரு கட்டளையும் உண்மை மற்றும் ஞானத்திலிருந்து காலியாக இல்லை. இது பற்றி சிறிது சிந்தனை செய்தால் இந்த கட்டளையும் கூட உண்மையில் பெண்ணின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே கூறப்-பட்டிருக்கின்றது என்பது தெரிய வரும்.

பெண்களுக்கு தலாக் கொடுத்தவுடன் எவ்வாறு அவர்களை விட்டுப் பிரிந்து செல்வதற்கான உரிமை ஆண்களுக்கு இருக்கின்றதோ அவ்வாறே பெண்களுக்கும் கூட ஆண்களைப் போன்று அவர்கள் குலா பெற்றவுடன் ஆண்களை விட்டு விட்டு தனியாகப் பிரிந்து செல்வதற்கான உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை சிறிது நேரம் வரை நாம் ஏற்றுக் கொள்வோம். இதன் விளைவாக எந்த நேரத்தில் பெண் தனது கணவனுக்கு குலா கூறுகின்றாரோ அல்லது தனது கணவரை விட்டுப் பிரிந்து செல்கின்ற அறிவிப்பை கணவரிடம் எழுதிக் கொடுக்கின்றாரோ அப்போதே பெரும்பாலும் நடைபெறுகின்ற சம்பவங்களில் இருந்து தெரிய வருவது போன்று அந்த பெண் ஆணின் அநீதிக்கும் காட்டுமிராண்டித்தனமான செயல்களுக்கும் இலக்காகி விடுவார். கணவன் அவளது எல்லா பொருள்களையும் அபகரித்துக் கொண்டு அவளை அடித்து வீட்டை விட்டு வெளியேற்றி விடுகின்றான். பிறகு அந்நிலையில் அந்த அப்பாவி பெண்ணால் என்ன செய்ய முடியும்? அவளுக்குரிய மஹர் தொகையையும் அவளது பொருள்களையும் யார் அவளுக்கு திரும்பப் பெற்றுத் தருவார்? அவளது ஆண் குழந்தைகள் மற்றும் பெண் குழந்தைகளுக்குரிய உணவு மற்றும் அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதற்கான செலவுகள் பற்றி யார் முடிவெடுப்பார்? அவருக்கு இவ்விஷயத்தில் யார் நீதியை பெற்றுத் தருவார்? நிச்சயமாக அவருக்கு கஸாவின் (நீதித் துறையின்) கதவுகளையே தட்ட வேண்டியது வரும். ஏனென்றால், அவள் சுயமே தனக்குரிய உரிமைகளைப் பெற முடியாது.


**திருக்குர்ஆனிலிருந்து...**

*நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்குக் கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)*

**பீ.ஜே. சுலைமான்**
மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*ஆணவத்திலிருந்து விலகிக் கொள்ளுங்கள் என நான் என் ஜமாஅத்திற்கு அறிவுறுத்துகிறேன். ஏனென்றால் கண்ணியமிக்க நமது இறைவனின் பார்வையில் ஆணவம் வெறுக்கத்தக்கதாகும்.*

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோள் உள்ளது. அவர் அதனிடத்துத் தமது முழுக் கவனத்தையும் செலுத்துகிறார். எனவே நீங்கள் நல்லவற்றில் ஒருவரையொருவர் முந்திக்கொள்ள முயலுங்கள். நீங்கள் எங்கிருந்தாலும், அல்லாஹ் உங்களை ஒன்று சேர்ப்பான்...... (2:149)*

**மர்ஹூம் முஹம்மது யூசுஃப்**
மற்றும் குடும்பத்தினர், உடன்குடி.

எனவே பெண் தனது உரிமைகளைப் பெறுவதற்கு தனது விவகாரத்தை நீதித்துறையின் முன்பு எடுத்து வைப்பதை இஸ்லாம் விரும்புகின்றது. அதன் மூலம் கஸா எல்லா விவகாரங்களையும் கவனமாக ஆராய்ந்து அவளுக்கு அவளது உரிமைகளை முழுமையாக பெற்றுத் தர முடியும்.

இஸ்லாம் எவ்வகையிலும் பெண்களுக்கான உரிமைகளைப் பறிக்கவில்லை. மாறாக அது அவளுக்குரிய உரிமைகளை முழுமையாக செலுத்தி இருக்கின்றது. கொடுமை மற்றும் அநீதியின் ஆட்டுரலில் பல நூற்றாண்டுகளாக அரைக்கப்பட்டு வந்த பெண்களுக்கான உரிமையை இஸ்லாம்தான் முழுமையாக நிலைநாட்டியிருக்கின்றது. அந்த பெண்களை தரையிலிருந்து அது இறைவனின் அரியணையில் சென்று அமர வைத்திருக்கின்றது. அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது பற்றி மகத்தான போதனைகளை அது வழங்கி இருக்கின்றது. இஸ்லாத்தின் தோற்றுனரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெண்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்வதன் சிறந்த முன்மாதிரியை எடுத்துக் காட்டியுள்ளார்கள். இஸ்லாம் பெண்களுடன் எந்த அளவு நல்ல முறையில் நடந்து கொள்வது பற்றி போதித்திருக்கின்றதோ எந்த அளவு அவர்களது உரிமைகளை பாதுகாத்திருக்கின்றதோ அதில் பத்தில் ஒரு பங்கு பணியைக் கூட ஏனைய மார்க்கங்களால் செய்ய முடியாது. இது வெறும் வாதம் மட்டும அல்ல. மாறாக, இஸ்லாம் பெண்களுக்கு செய்துள்ள அந்த எல்லா நன்மைகளையும் ஒவ்வொன்றாக நாம் எண்ண முடியும். தாய், மனைவி, மகள், சகோதரி என்ற எல்லா நிலையிலும் இஸ்லாம் பெண்கள் மீது செய்துள்ள நன்மைகளை விளக்க வேண்டும் என்றால் அது ஒரு நீண்ட கட்டுரையாக ஆகி விடும். இக்காலத்தில் மனைவிக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளை எடுத்துக் கூறி இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்யப்படுவதால் அடுத்த இதழில் குறிப்பாக இஸ்லாம், மனைவியர் மீது செய்துள்ள நன்மைகள் பற்றி சுருக்கமாக எடுத்து கூறுவோம் - இன்ஷா அல்லாஹ்.

(தொடரும்...)

## திருக்குர்ஆனிலிருந்து...

மக்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்களது இறைவனை மட்டும் வணங்குங்கள். அதனால், நீங்கள் எல்லா விதமான ஆபத்துகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ளலாம். (2:22)

**A. பஷீர் அஹ்மது**

பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இவ்வுலகில் இறைவனைப் பார்க்கும் பேறிழந்தவர்கள் மறுமையிலும் இருளிலே இருப்பர். இறைவன் கூறுகிறான். இவ்வுலகில் குருடராக இருப்போர் மறுமையிலும் குருடராகவே இருப்பர். (17:73)

**K. சலீம் அஹ்மது**

பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, திருச்சி.

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் U.K. -வில் நடைபெற்ற 51 - ஆவது ஆண்டு மாநாட்டின் போது 29.07.2017 அன்று பெண்களுக்கு ஆற்றிய உரையிலிருந்து...**

புதிய சந்ததிகளை பேணுவதன் பொறுப்பை இஸ்லாம் பெண்களின் மீது சுமத்தி இருக்கிறது. ஒரு சந்ததிக்குப் பிறகு இன்னொரு சந்ததியைப் பாதுகாக்க முடியும் என்றால் அது பெண்தான். பெண் அல்லாஹ்வின் கட்டளைகளை புரியவில்லை என்றால் - புரிவதற்கு முயற்சி செய்யவில்லை என்றால் பிறகு சந்ததிகளின் தர்பிய்யத்திற்கும் எந்த உத்தரவாதமும் வழங்கப்பட முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஓர் உண்மையான முஸ்லிம் பெண்ணின் அந்தஸ்து என்ன? என்பதைப் பற்றி அவருக்கு உணர்வூட்டுவதற்காக பெண்ணின் உயர்ந்த மகத்துவத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த விதமான உணர்ச்சிப்பூர்வமான, மேலோட்டமான கட்டளையையும் கொடுக்கவில்லை. மாறாக, சந்ததிகளை பாதுகாத்துக் கொண்டே செல்வதற்காக அவர்களின் உலகம், மறுமை ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக பெண்ணுக்கு வாழ்வின் ஒரு குறிக்கோளை வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் ஒரே சொற்றொடரில் பெண்ணின் உயர்ந்த அந்தஸ்து மற்றும் பொறுப்புகளின் பக்கம் வழிகாட்டியிருக்கிறார்கள். சுவர்க்கம் தாய்மார்களின் காலடிகளின் கீழ் உள்ளது என்று அவர்கள் கூறினார்கள். இந்த நற்செய்தி பெண்ணின் பொறுப்புகளுடன் தொடர்புபடுத்திக் கூறப்பட்டிருக்கின்ற அதே நேரத்தில் எந்தத் தாயின் காலடியின் கீழ் சுவர்க்கம் இல்லையோ அங்கேயே நரகமும் இருக்கிறது என்ற எச்சரிக்கையும் கொண்டுள்ளது. தாயின் காலடியின் கீழ் சுவர்க்கம் இருக்கிறதென்றால் குழந்தை தாயின் நல்ல தர்பிய்யத்தினால் நாட்டின் நல்ல உறுப்பினராகின்றான்; ஒரு குழந்தை சமுதாயத்தின் மூலதனமாகின்றது; ஒரு குழந்தை உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை கொடுப்பவனாக ஆகின்றது.

தர்பிய்யத்துடன் துஆவும் இருக்கும்போதுதான் அதில் பரக்கத் இருக்கிறது என்பதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். தாய்மார்களின் துஆக்களின் நிலைமைகளைப் பார்த்து குழந்தைகளிடமும் துஆவின் பக்கம் கவனம் உருவாகிறது. எனவே தர்பிய்யத் என்றால், வெளிப்புறமான தர்பிய்யத் மட்டும் அல்ல. மாறாக, ஒரு தாய் துஆவின் மூலமாக அல்லாஹ்வுடன் தொடர்பை உருவாக்க வேண்டியதும் அவசியமாகும். சந்தேகமின்றி, தந்தைமார்களும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அவர்களின் ஆன்மீகமும் அவர்களின் இறைவணக்கங்களும் உயர்தரமானவையாக இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட வயதிற்குப் பிறகு பிள்ளைகள் தந்தையைப் பார்க்கின்றனர். ஆனால் குழந்தைகளின் எண்ணற்ற கடிதங்கள் எனக்கு வருகின்றன. அதில் தாயின் நல்ல தர்பிய்யத் மற்றும் நல்ல செயல் எங்களுக்கு நல்ல தாக்கங்களை ஏற்படுத்தின. எங்கள் தந்தை எங்களை கவனிப்பதில்லை; அல்லது அவர் எங்கள் தாயை கவனிப்பதில்லை என அவர்கள் எழுதுகின்றனர். அப்படிப்பட்ட முறையீடுகளை பிள்ளைகள் செய்கின்றனர். மேலும் இதன் காரணமாக சில பிள்ளைகள் சீர்கெட்டும் போய் விடுகின்றனர். ஆனால், தாயின் துஆவினால் பிள்ளைகள் சீர்கெட்டுப் போவதிலிருந்து தப்பிக்கின்ற பல உதாரணங்கள் இருக்கின்றன. எனவே நாம் நமது சந்ததிகளை சீர்குலைக்க விட மாட்டோம்; நாம்தான் சந்ததிகளைக் காப்பாற்ற வேண்டும் என தாய்மார்கள் உறுதியான எண்ணம் கொண்டு விட்டால் மோசமான நிலைமை இருந்தாலும் குழந்தைகளின் தந்தையின் - அதாவது தன் கணவரின் ஒத்துழைப்பு இல்லாவிட்டாலும், ஆண்கள் அநீதியாகவும் தவறாகவும் நடந்து கொண்டாலும் குழந்தைகள் மார்க்கத்தி நிலைபெறுகின்றனர்.

இங்கு நான் ஆண்களுக்கும் கூறுவேன். அவர்கள் தங்கள் வீடுகளை சுவர்க்கமாக ஆக்குவதற்கு அவர்களும் தமது பங்கை நிறைவேற்ற வேண்டும். இது தாயின் பொறுப்பு என்று அவர்கள் மீது சுமத்தி விடாதீர்கள். வீடுகளில் ஆண்கள் தமது கடமைகளின் வெளிப்பாடு, அன்பு, பிறகு தாய்மார்களின் நல்ல தர்பிய்யத்தின் பக்கம் கவனம் செலுத்துவது ஆகியவை குழந்தைகளின் தர்பிய்யத்திற்கு மேலும் அதிகமாக சிறப்பை உருவாக்குகின்றன. ஆனால் ஆண்கள் தயாரில்லை. நாம் என்ன செய்வது; நாம் என்ன தர்பிய்யத் செய்வது என நினைத்து உட்கார்ந்து விடாதீர்கள் என நான் தாய்மார்களுக்குக் கூறுவேன். நான் கூறியது போன்று எண்ணற்ற குடும்பங்கள் இருக்கின்றன. அங்கு தந்தையர்கள் தவறாக நடந்து கொண்டாலும் தாயின் நல்ல தர்பிய்யத்தினால் சந்ததிகள் மார்க்க அளவிலும், நாட்டின் அளவிலும் சிறந்தவர்களாக மாறுகின்றனர். ஆணாக இருந்தால் அவர் தாயின் அந்த தர்பிய்யத்தின் காரணமாக அவர் நன்மையில் நிலைத்து நிற்கும் கணவராகவும், தந்தையாகவும் மாறுவார். உயர்ந்த ஒழுக்கங்களைக் கொண்டவராக மாறுவார். இந்த உலகிலும் சுவர்க்கத்தை உருவாக்குவதற்கு தனது மனைவிக்கு உதவியாளராக மாறுவார். எனவே ஒரு சந்ததியிலிருந்து அடுத்த சந்ததியை தய்மார்கள் காப்பாற்ற முடியும். அதாவது கணவர் தனது பொறுப்பை சரியான முறையில் நிறைவேற்றினால், பிள்ளைகளை சரியான முறையில் பாதுகாத்தால் மகள் என்றால் அந்த நல்ல தர்பிய்யத்தின் காரணமாக சுவர்க்கத்திற்க கொண்டு செல்லக் கூடிய தாயாக அவள் மாறுவாள்.

எனவே இஸ்லாத்தின் மீது ஈமான் கொள்பவர்களிடம் இஸ்லாம் ஒரு முக்கியமான பொறுப்பை சுமத்தியிருக்கிறது. அதனை மிகவும் அழகிய, ஞானம் நிறைந்த, பொருள் செறிந்த சொற்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அதை நமது பெண்கள், இள வயது பெண்கள் எல்லா நேரமும் முன்னால் வைக்க வேண்டும். இஸ்லாம் பெண்களுக்கு வழங்கி இருக்கின்ற அந்தஸ்து இமாமத்தை விட அதிகமானதாகும். சுவர்க்கம் தாய்மார்களின் காலடிகளின் கீழ் இருக்கிறது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். எனக்குப் பின்னால் தொழுபவர்கள் சுவர்க்கத்தில் செல்வார்கள் என்று எந்தவோர் இமாமும்இந்த உத்தரவாதத்தை வழங்க முடியாது. இன்னும் கூறுவதென்றல், தொழும்போது இமாமின் உள்ளத்தில் ஏதாவது தவறான எண்ணம் வந்து விட்டால் பின்னால் தொழுபவர்களின் காரணமாக அந்த தவறான எண்ணத்தினால் அது அந்த இமாமின் மீது விழும். பிறகு இவர்கள் சுவர்க்கத்தை எங்கிருந்து கொடுக்கப் போகிறார்கள். ஆனால் பெண் எத்தகையவர் என்றால், அவர் நல்லவராக இருப்பதன் காரணமாக (பிள்ளையை) நல்ல இமாமாக ஆக்கக் கூடியவராவார். சுவர்க்கத்தின் பக்கம் கொண்டு செல்லக் கூடியவராவார். நாட்டின் நல்ல குடிமகனாக ஆக்குபவராவார். உயர்ந்த அறிவியல் அறிஞராக ஆக்குபவர் ஆவார். நாட்டின் ஓர் உயர்ந்த தலைவராக ஆக்குபவர் ஆவார். எனவே பெண்ணிற்கு மிகப் பெரும் அந்தஸ்து இருக்கிறது.

(மொழியாக்கம் : ஆசிரியர், தமிழ் பத்ர் வார இதழ்)

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 21 September 2017 Issue No. 38

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(குத்பா தொடர்ச்சி...)*

வழக்கமாக இருப்பதா? மக்களுக்கு கஷ்டம் தருவதுதானா உங்கள் வழக்கமாக இருக்கிறது? இல்லை. மாறாக, மார்க்கம் என்பது இறைவனிடம் இருக்கிற அந்த வாழ்வைப் பெறுவதற்காக ஆகும். அந்த வாழ்வு இறை பண்பு மனிதனுக்குள் நுழையாமல் எவருக்கும் கிடைக்கவுமில்லை. வருங்காலத்திலும் கிடைக்கப் போவதுமில்லை. இறைவனுக்காக எல்லாரின் மீதும் கருணை காட்டுங்கள். எந்த முயற்சியும் இல்லாமல் இதனைப் பெற முடியாது; உயர் நல்லொழுக்கமும் கிடைக்காது.''

அவர்கள் கூறுகிறார்கள்: ''இறைவனுக்காக எல்லாரின் மீது கருணை காட்டுங்கள். அதனால் வானத்தில் உங்கள் மீது கருணை காட்டப்படும். வாருங்கள்! உங்களுக்கு நாம் ஒரு வழியைக் கற்றுத் தருகிறோம். அதனால் உங்கள் ஒளி எல்லாருடைய ஒளியையும் மிகைத்து விடும். அது என்னவெனில், எல்லா கீழ்த்தரமான காழ்ப்புணர்ச்சிகள் மற்றும் பொறாமைகளையும் விட்டு விடுங்கள். மனித குலத்தின் மீது அனுதாபம் உடையவராகுங்கள். இறைவனிடத்தில் மாய்ந்து விடுங்கள். அத்துடன் மிக உயரிய தூய்மையைப் பெறுங்கள். இந்த வழியினால் அற்புதங்கள் வெளிப்படுகின்றன. துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுகின்றன. மலக்குகள் உதவிக்காக இறங்குகின்றனர். ஆனால் இது ஒரு நாளின் வேலையல்ல. முன்னேறுங்கள்; முன்னேறுங்கள். அந்த துணியை துவைப்பவனிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ளுங்கள். அவன் முதலில் துணிகளுக்கு வெள்ளாவி வைக்கிறான். எந்த அளவுக்கு எனில் நெருப்பின் தாக்கத்தினால் எல்லா அழுக்குகளும் கறைகளும் துணியை விட்டு அகன்று விடுகின்றது. பிறகு காலையில் எழுந்து, தண்ணீரில் துணிகளை நனைக்கிறான். மீண்டும் மீண்டும் கல்லில் அடிக்கிறான். அப்போது துணியில் உள்ள அழுக்குகள், துணியின் அங்கமாகி விட்ட அழுக்குகள் சிறிது நெருப்பின் துயரத்தைப் பெற்றும் சிறிது தண்ணீரில் நனைந்தும் துணி துவைப்பவரின் கரங்களால் அடி வாங்கியும், ஒரேடியாக கழன்று விடத் தொடங்குகிறது. துணியை துவைக்கும்போது மீண்டும் மீண்டும் அதனைக் கசக்க வேண்டியது வருகிறது அல்லது துணி துவைப்பவர் கல்லில் அடிக்கிறார். தற்காலத்தில் Washing Machine வேகமாக துணிகளைச் சுற்ற வைத்து அழுக்கை அகற்றுகிறது. இந்த உதாரணத்தை அன்னார் தருகிறார்கள்.

அன்னார் கூறுகிறார்கள்: எந்த அளவுக்கு எனில் துணி சுத்தமாகி விடுகிறது. ஆரம்பத்தில் இருந்தது போன்று ஆகி விடுகிறது. இவ்வாறே மனித மனத்தையும் தூய்மைபடுத்த வேண்டியதுள்ளது. உங்கள் முழு ஈடேற்றமும் இந்த தூய்மையை பொருத்தே உள்ளது.

இந்த விஷயத்தைத்தான் இறைவன் திருக்குர்ஆனில் கூறுகிறான்: قَدْ أَفْلَحَ مَنْ زَكّٰهَا – அதாவது அவரது ஃநப்ஸ் தூய்மை அடைந்தது. வித விதான அழுக்குகள் மற்றும் கறைகளிலிருந்து தூய்மையாக்கப்பட்டுள்ளவர் இரட்சிப்பைப் பெற்று விட்டார். **(91:10)** (கவர்மெண்ட் அங்குரஸி அவர் ஜிஹாது. ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 14-15) இவ்வாறு துணியைத் துவைக்கும் உதாரணம் நம்முள் உள்ளது. அதுபோன்று உங்கள் நஃப்ஸை கழுவ முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பு தருவானாக. நாம் அன்னாரது போதனையின்படி செயல்பட்டவாறு மனித குலத்தின் மீது அனுதாபம் காட்டுபவராகவும், சமாதானத்திற்கான அடித்தளத்தை ஏற்படுத்துபவராகவும், தவ்ஹீதின் சரியான புரிதிறன் பெறுபவராகவும், சமுதாயத்தில் அன்பு மற்றும் நேசத்தைப் பரிமாறுபவராகவும் இருப்போமாக. உலகின் விருப்பம் நம் மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருக்கட்டுமாக. அல்லாஹ்வின் விருப்பத்தை நாம் எப்போதும் தேடுபவராகவும் அதுவே நமது முன்னுரிமையாகவும் இருக்கட்டுமாக.

★ ★ ★ ★ ★

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

உடலில் பல கொப்பளங்கள் தோன்றும் என்று கூறப்பட்டது. அந்த மகன் பிறந்தார். அவருக்கு அப்துல் ஹை என்று பெயர் வைக்கப்பட்டது. வழக்கத்திற்கு மாற்றமாக அவரது உடலின் பல பொக்களங்கள் தோன்றின. அவற்றின் அடையாளம் இப்போது வரை இருக்கின்றன. இந்த பொக்களங்கள் தொடர்பான அடையாளம் பற்றி மகன் பிறப்பதற்கு முன்னதாக பிரசுரம் மூலமாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

**நாற்பத்தி ஆறாவது அடையாளம்:** பஞ்சாபிலுள்ள ஓர் இடத்தைத் தவிர பஞ்சாபிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் பிளேக் நோயின் பெயரும் அடையாளமும் இல்லாமல் இருந்த ஒரு காலத்தில் பஞ்சாப் முழுவதும் பிளேக் நோய் பரவும். ஒவ்வோர் இடமும் பிளேக்கினால் மாசு படிந்ததாக ஆகி விடும். கொள்ளை நோய் தீவிரமாகப் பரவும். ஆயிரக்கணக்கான மக்கள் பிளேக்கிற்கு இரையாகி விடுவர். பல கிராமங்களும் பாழடைந்திருந்தன என்று இறைவன் எனக்கு தகவல் தெரிவித்திருந்தான். ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பிளேக் நோயின் கருப்பு செடிகள் நடப்பட்டிருப்பது எனக்கு காட்டப்பட்டது. பல்லாயிரக்கணக்கான பிரசுரங்கள் மூலமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் இந்த முன்னறிவிப்பை இந்த நாட்டில் நான் வெளியிட்டிருந்தேன். சிறிது காலம் கழிந்த பிறகு ஒவ்வொரு மாவட்டதிலும் பிளேக் நோய் வந்தது. இதுவரை ஏறக்குறை மூன்று இலட்சம் உயிர் இழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த மக்கள் தங்களை மாற்றிக் கொள்ளாத வரை இந்த நாட்டிலிருந்து ஒருபோதும் பிளேக் நோய் விலகாது என்று இறைவன் கூறியுள்ளான்.

**நாற்பத்தி ஏழாவது அடையாளம்:** ஜம்முவைச் சார்ந்த சிராகுத்தீன் என்ற ஒரு நபர் எனது சீடர்களில் ஒருவராக இருந்தார். பிறகு அவர் முர்தத் ஆகி விட்டார். தான் ஒரு இறைத் தூதர் என்று அவர் வாதம் புரிந்தார். நான் ஈஸாவின் தூதராக இருக்கின்றேன் என்று அவர் கூறினார். அவர் எனக்கு தஜ்ஜால் என்று பெயர் வைத்தார். இந்த தஜ்ஜாலை இந்த தடியினால் நான் கொல்ல வேண்டும் என்பதற்காக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் எனக்கு ஒரு தடியை தந்துள்ளார் என்று அவர் கூறினார். அவர் தொடர்பாக அல்லாஹ்வின் கோபம் என்ற நோயால் அதாவது பிளேக்கினால் அவர் அழிந்து விடுவார் என்றும் இறைவன் அவரை இழிவுப்படுத்தி விடுவான் என்றும் நான் முன்னறிவிப்பு செய்திருந்தேன். அதற்கேற்ப *4* ஏப்ரல் ***1906*** அன்று தனது இரண்டு மகன்களுடன் அவர் பிளேக் நோயினால் அழிந்து விட்டார்.

**நாற்பத்தி எட்டாவது அடையாளம்:** ஹோஸ்யார்பூரைச் சார்ந்த மிர்ஸா அஹ்மது பேக் தொடர்பாக மூன்று வருடங்களுக்குள் அவர் இறந்து விடுவார் என்று நான் முன்னறிவிப்பு செய்திருந்தேன். அவ்வாறே மூன்று வருட கால அளவிற்குள் அவர் மரணித்து விட்டார்.

**நாற்பத்தி ஒன்பதாவது அடையாளம்:** அதாவது நான் பூகம்பம் தொடர்பாக முன்னறிவிப்பு செய்திருந்தேன். அது அல் ஹகம் மற்றும் அல் பத்ர் பத்திரிகைகளில் அச்சிடப்பட்டிருந்தது. ஒரு கடுமையான பூகம்பம் வரவிருக்கின்றது. அது பஞ்சாபின் சில பகுதிகளில் கடுமையான அழிவு ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கும் என்று முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. முன்னறிவிப்பின் முழுமையான வாசகம் இதுவாகும்: عَفَتِ الدِّيَارُ مَحَلُّهَا وَمُقَامُهَا - பூகம்பத்தின் குலுக்கல்' இந்த முன்னறிவிப்பும் 4 ஏப்ரல் 1905 அன்று நிறைவேறியது.

**ஐம்பதாவது அடையாளம்:** இந்த பூகம்பத்திற்குப் பிறகு வசந்த காலத்தின் நாட்களில் இன்னொரு பூகம்பம் வரும் என்று நான் முன்னறிவிப்பு செய்திருந்தேன். இறையறிவிப்பின் வடிவிலுள்ள இந்த முன்னறிவிப்பின் ஒரு வாசகம் இவ்வாறு இருந்தது. 'மீண்டும் வசந்த காலம் வந்தது. இறைவனின் வார்த்தை மீண்டும் நிறைவேறியது.' இதற்கேற்ப *28* பிப்ரவரி ***1906*** -ல் அந்த பூகம்பம் வந்தது. மேலும், மலைப் பகுதிகளில் பல உயிரிழப்புகளும் பொருட்சேதமும் ஏற்பட்டதன் மூலம் முன்னறிவிப்பு நிறைவேறியது.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 228-231)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad